குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 40] துன்மதி ஆண்டு ஐப்பசித்திங்கள் 10—11—81 [இதழ் 12

திருக்கடவூர் அருள்மிகு அபிராமி அம்மை

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்
அருள்வாக்கு

—[★]—

அரும்பாச நன்மைதின்மை
ஆகம் அதன்மேல்
விரும்பாது நிட்டையிலே
மேவித் — திரும்பாத
மானந்தா என்னறிவில்
மாருது பொங்கிஎழும்
ஆநந்தா சொக்கநாதா.

— சொக்கநாத வெண்பா. 82

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 40 || 10–11–81 || இதழ் 12

உட்பொருள்

எண்		பக்கம்
1	விழிப்புணர்வு வேண்டுகோள் ...	529
2	மத மாற்றம் தேவைதானு? ...	533
3	வாகீசர் வாக்கில் தூது இலக்கியம் ...	542
4	வாசகர்கடிதங்கள்	544b, 556, 564
5	கார்த்திகைஞாயிறு விழாச் சிறப்பு ...	544d
6	திருநாலூர்மயானம், திருக்கடுவாய்க்கரைப் புத்தூர் தலச் சிறப்புக்கள் ...	545
7	அபிராமி அந்தாதி ...	552
8	சிவ கன்னியர் ...	557
9	பார்வையாளர் குறிப்பு	562
10	சப்த மாதர்கள் ...	663
11	செய்திகள் ...	565
12	எதிர்காலம் ...	571

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 18

ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

உ

சிவமயம்

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம்" திங்கள் இதழ் சந்தாதாரர்களுக்கு

ஓர் அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து திங்கள் தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி, சிவஞானத் தேன் நிறைந்து, கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் "**ஞானசம்பந்தம்**" நாற்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறது.

சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆண்டுக் கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் "**ஞானசம்பந்தம்**" இதழைப் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக.

வேலை மிகுதியினாலோ அல்லது மறதியினாலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடையில்லாமல் "**ஞானசம்பந்தம்**" பெற வாய்ப்பு அளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. **ஆயுள் சந்தா** அறிவிப்புச் செய்தது முதல் இன்று வரையில் எண்ணூற்று நாற்பத்தோர் 841 அன்பர்களுக்கு மேலாக ஆயுள் சந்தா செலுத்தி ஆயுள் உறுப்பினராகி உள்ளனர்.

ஆயுள் சந்தா செலுத்தினல் அவர்களது வாரிசுகளும் "ஞானசம்பந்தம்" பெற வசதி செய்து தரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ கல்வி அற நிறுவனங்களுக்கோ மாற்றிக் கொடுக்க விரும்பினல் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும்.

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்ருேம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக்கொள்ளுங்கள்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	...	ரூ.	10—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	...	ரூ.	12—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு)	...	ரூ.	18—00
ஆயுள் சந்தா (உள்நாடு)	...	ரூ.	100—00
ஆயுள் சந்தா (வெளிநாடு)	...	ரூ.	125—00

விளம்பரம்

பின் அட்டை வெளிப்பக்கம்	**2-கலர்**	**ரூ.**	**300—00**
பின் அட்டை உட்பக்கம்	**1-கலர்**	**ரூ**	**200—00**
இதழின் உட்பக்கம்	**,,**	**ரூ.**	**100—00**

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் - 609 001
தஞ்சை மாவட்டம்.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 40 | துன்மதி - ஐப்பசி - 10—11—81 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

விழிப்புணர்வு வேண்டுகோள்

தன் நிலை விளக்கம் :

தமிழ்நாடு அரசு, இந்துசமயத் திருமடங்களின் சமய நெறி முறைகளில் தலையிடும்நோக்கில் ஒரு சட்டத்தை நிறைவேற்றிக் குடியரசுத்தலைவரின் இசைவுபெற அனுப்பியுள்ளது. இச்சட்டத்தின் தீமைகுறித்து 'ஞானசம்பந்தம்' ஆவணிஇதழில் 10—9—81 தலையங்கம் ஒன்றுஎழுதி, குடியரசுத்தலைவரை இச்சட்டவடிவுக்கு இசைவளிக்க வேண்டாம் என வேண்டுகோள் விடுத்திருந்தது. இதற்குப்பின் 'தினமணி' நாளிதழில் அன்பர் திரு. மு. அருணாசலம் அவர்கள் அரசின் நிலையை ஆதரித்து, இச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கவேண்டும்என இரண்டுகட்டுரைகளை எழுதியிருந்தார்கள். இக்கட்டுரைபற்றி விளக்கம் கேட்டு 'ஞானசம்பந்தம்' வாசகர் ஒருவர் கடிதம் எழுதியுள்ளார். வேறுசிலரும் நேரில் இதுபற்றி 'ஞானசம்பந்தத்'தின் கருத்தறிய விருப்பம்

தெரிவித்தனர். திருமடங்கள் பற்றிய ஒரு தன்னிலை விளக்க மாகவே இத்தலையங்கம் எழுதப்படுகிறது.

இது யார் குறை ?

பல்வேறு செய்திகளை, திரு. மு. அருணாசலம் அவர்கள் தம் கட்டுரைகளில் குறித்திருந்தார்கள். ஒன்றிரண்டு செய்திகளை மட்டுமே நாம் இங்கே விளக்கக் கடமைப்பட்டுள்ளோம். தமிழகத்துத் திருமடங்கள் நன்கு செயற்படவில்லை என்றும், திருமடத்துத் தலைவர்கள் பலர் உரியதகுதி உடையவர்களாக இல்லை என்றும், இவற்றால்தான் அரசு இப்போது இவற்றின் நடைமுறைகளில் தலையிடப் புதிய சட்டம் கொண்டுவர நேர்ந் துள்ளது என்றும் அவர்கள் கட்டுரையில் காணப்படுகின்றன. 'ஞானசம்பந்தம்' தனது ஆவணி இதழில் இவைபற்றி விரிவாக எழுதியிருந்தது. குறைநிறைகள் எங்கும்உண்டு. ஒரு நிறுவனத் தைத் தோற்றுவித்தவரைப் போன்றே பின் அதனை வழிநடத்து பவர் அனைவரும் அமைவர் என்று எதிர்பார்க்க இயலாது. காந்தியடிகளைப் போன்ற தலைவர்கள் இல்லை என்பதற்காக ஒரு தேசிய இயக்கத்தை அழித்துவிடமுயல்வது அறமாகாது. திருமடங்களில் சிற்சில குறைபாடுகள் இருக்கலாம். இவற்றை நீக்கி, அவற்றின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் அரசின் கடமையை 'ஞானசம்பந்தம்' வரவேற்றிருந்தது. குறைகளைத் திருத்துவதற்குப் போதிய அதிகாரங்கள், இப்போதுள்ள இந்து சமய அறநிலையச்சட்டங்களிலேயே இருக்கின்றன. அவற்றைச் செம்மையாகப் பயன்படுத்தாத குறை அறநிலையத்துறை ஆட்சியையேசாரும். எனவே, புதியசட்டம் ஒன்றைக்கொண்டு வருவது தேவையற்றது என்பதோடு புதிய பல சிக்கல்களையும் உண்டுபண்ணும்.

சர். சி. பி. கமிஷன் ஏன் ?

இரண்டாவதாக 1960 – 62 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க, திரு. சர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு (கமிஷன்) வெளியிட்ட இந்துசமய அறநிலையத்துறை அறிக்கையினைக் கட்டுரை ஆசிரியர், தமிழ்நாடு அரசின் சட்டநடவடிக்கைகளை

நியாயப்படுத்த. பல்வேறு இடங்களில் மேற்கோளாகக் காட்டியுள்ளார். உண்மைநிலைவேறு. தமிழ்நாடு, மகாராஷ்டிரம் போன்ற சில மாநிலங்களில் மட்டுமே அப்போது இந்துசமய அறநிலையத்துறை செயற்பட்டுவந்தது. அனைத்து மாநிலங்களும் அடங்கிய இந்தியநாடு முழுவதற்கும், ஒரே மாதிரியான இந்து சமய அறநிலையத்துறையை விரிவுபடுத்த நடுவண் அரசு விரும்பியது. ஆனால், சர். சி. பி. இராமசாமிஐயர் அவர்களின் அறிக்கை' பல்வேறு ஆசார அனுஷ்டானங்களையும், நடைமுறைகளையும் கொண்டிருக்கும் பல்வேறு மாநிலங்களுக்கும் ஒரேமாதிரியான சட்டவரைவு பொருந்தாது எனக் கூறியது. மத்திய அரசு இது வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே. அதனை ஏற்றுத் தம் முயற்சியைக் கைவிட்டதாகவே தெரியவருகின்றது. இவ்வறிக்கையில் பல இடங்களிலும் வட இந்திய மடங்களின் செயற்பாடுகள்பற்றியே குறைகூறப்பட்டுள்ளன. தென்னாட்டுத் திருமடங்கள்பற்றி, குறிப்பாகத் தமிழகத்துத் திருமடங்களின் நடைமுறை குறித்துப் பெரிதும் பாராட்டியே கூறப்பட்டுள்ளது.

காலத்தின் கோலம் :

மூன்றுவது, திருமடங்களின் 'வாரிசு' நியமனம் பற்றியது தமிழகத் திருமடங்களில் 'வாரிசு' நியமனம் பற்றி அந்தந்த மடங்களின் சம்பிரதாயங்களை ஒட்டிப் பல்வேறு நடைமுறைகள் உள்ளன. அவையே இன்று வரை நடைமுறையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வாரிசு நியமனத்தில் குறைபாடுகள் இருந்தால் நீதிமன்றத்தின்வாயிலாகப் பரிகாரம்காணச் சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும் போது நீதிமன்றத்தின்வழியே பரிகாரம்காண முற்படாமல், புதுச் சட்டம் இயற்றி அதிகாரத்தை இலாகா கைப்பற்ற முயற்சிப்பது ஆபத்தானது. இத்தகைய சட்டத்திருத்தத்திற்கு இசைவு அளிக்க, சமயப் பற்றுமிக்க திரு. மு. அருணசலம் அவர்கள் பரிந்துரைப்பதைக் காலத்தின் கோலம் என்பதைத் தவிர வேறு என்ன கூறுவது?

நடுவர் குழுவுக்கு விடுக :

சர். சி. பி. இராமசாமிஐயர் கமிஷன் அறிக்கை இவ்வாரிசு நியமனம் பற்றித்தெளிவுபடுத்தியுள்ளது. ஆணையர் அறநிலையங்களின்சொத்துக்கள் இவற்றின் வருவாய்-செலவினங்கள்பற்றிய செயற்பாடுகளில் தலையிட உரிமை உடையவரேயன்றி, சமய நிறுவனங்களின், சமய ஆசாரங்கள் - சம்பிரதாயங்கள் நடைமுறை மரபுகளில் தலையிடச் சிறிதும் அதிகாரம் இல்லாதவர் எனத் தெளிவுபடுத்துகிறது. மேலும், இவ்வகை சம்பிரதாய நடைமுறைகளில் தவறு நேர்ந்துள்ளதாக ஆணையர் கருதினால், இதனை ஒரு நடுவர் குழுவின் (TRIBUNAL) பரிசீலனைக்கு உட்படுத்தலாம் என்றும், இந்நடுவர் குழுவில்இடம்பெறவேண்டியவர்களின் தகுதி பற்றியும் கமிஷன் அறிக்கை விரிவாகக் கூறியுள்ளது. இவற்றுள் யாதொன்றையும் திரு மு. அருணசலம் அவர்கள் காணாததுபோல் எழுதியிருப்பது வருந்தத்தக்கது.

வேண்டுகோள் :

ஆணையருக்கு வழங்கப்படும் இப்புதிய அதிகாரம் 1. நீதி மன்ற உரிமையைத் தனி ஒருவருக்கு வழங்குவதால் நீதிக்கு முரணானது. 2. குற்றஞ்சாட்டுவதும் ஆணையர், தீர்ப்பு வழங்குவதும் ஆணையர் என்பதனால் ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிரானது. 3. சமயச் சார்பற்ற அரசு தனிப்பட்ட ஒரு சமயத்தின் உரிமைகளில் செய்யும் அப்பட்டமான குறுக்கீடு. 4. வாரிசு நியமனத்தில் நீதிமன்றத்திற்குரிய அதிகாரத்தை இலாகா கைப்பற்ற முயற்சிப்பது திருமடங்களின் ஸ்தாபகர்கள் நோக்கத்திற்கு முரணானது. எனவேதான் பல வகையிலும் முரண்பட்ட இச்சட்டத்திருத்தத்தை மாண்புமிகு. ஜனாதிபதி அவர்கள் அங்கீகரிக்காமல் கைவிடவேண்டும் என்று மீண்டும் ஞானசம்பந்தம் வற்புறுத்தி வேண்டுகோள் விடுக்கிறது. சமயம், சமுதாயம், நாடு நலம்பெற விழிப்புணர்வு மிக்க இவ் வேண்டுகோளை மாண்புமிகு. ஜனாதிபதியவர்களுக்குக்காலத்தில் சமர்ப்பிக்கவேண்டியது ஆஸ்திகர்கள் அனைவரின் தலையாய கடமையாகும்.

காலம் பொன் போன்றது.

கடமை கண் போன்றது.

மத மாற்றம் தேவைதானு?

[மாலைமுரசு (திருச்சிப் பதிப்பு) தீபாவளிச் சிறப்பிதழில் வெளிவந்த பேட்டிக்கட்டுரை]

"தமிழ் வளர்க்கும் தருமபுரம்" என்ற புகழ்பெற்ற தருமபுரம் ஆதீனம் தமிழ்நாட்டில் உள்ள மிகப்பெரிய மடங்களில்ஒன்று. 500 ஆண்டுவரலாற்றைத்தன்னகத்தேகொண்டுள்ள இம்மடத்தின் 26-வது மடாதிபதியிடம் மதம்மாற்றம் பற்றித் தாங்கள் கூறுவதென்ன என்றதற்கு "இதுகடவுளின் கட்டளை. இது நடக்காவிட்டால் இந்து மதத்தில் இவ்வளவு பெரிய எழுச்சி ஏற்பட்டு இருக்குமா? ஆனல் அரிஜனங்கள் மதமாற்றம் என்பது தேவையற்றது. மதமாற்றத்தால் அவர்களது பிரச்சனைகள் தீர்ந்துவிடாதே" என்று கூறியதோடு அதற்கான காரண காரியங்களையும் விரிவாக விளக்குகிருர்.

"மடங்களைக் கட்டுப்படுத்த அரசு சட்டம் கொண்டு வந்துள்ளதே" என்றதற்கு "இதுவும் தேவையற்றது. மடாதிபதிகள்என்ன மோசடியாசெய்கிருர்கள்? மடங்களைத் தாக்குவதால் நாட்டில் என்ன நன்மை ஏற்பட்டு விடும்? இப்படித் தொடர்ந்து எண்ணற்ற கேள்விகளை எழுப்பி, இடிந்த கோயில்கள் எண்ணுயிரம் ஏறிட்டுப் பார்க்கவும் நாதியில்லையே' என்று தனது உள்ளக் குமுறலையும் வெளியிடுகிருர்; தொடருங்கள்.

இரண்டு பக்கமும் பெரிய மதில்சுவர். அதன் இடையிலே அகலமான சாலை. மதில் சுவர்களின் பின் பக்கத்தில் சோலை எனக் காட்சி தரும் தென்னை, மா, வாழை மரங்கள்.

அந்தப் பகுதி எங்கும் ஒரே அமைதி — குளுமை. மதில் சுவர்கள் நடுவில் அமைந்த சாலையில் நடந்து செல்லும்போது மடாலயத்தில் மணியோசை எங்களை 'வா' என்று அழைத்தது. ஏதோ அரண்மனைக்குள் செல்வது போன்ற எண்ணம்.

2 பர்லாங் தூரம் நடந்ததும் எங்கள் கண்ணில் பட்டது பெரிய மாளிகை - ஒய்வு மாளிகை அது.

சிலைகள் அணிவகுப்பு!

அதற்கு இடப்புறம் திரும்பினல் பெரியகோட்டைச் சுவர். அந்தக் கோட்டை மதிலில்தான் எத்தனை சுதைச்சிற்பங்கள். மன்னர்கால சிப்பாய், வெள்ளையர் கால போலீஸ், குதிரைவீரர்கள் சுதைச்சிற்பங்களாக அணிவகுத்து நின்றனர்.

சிறிது தூரம் புல் தரையில் நடந்ததும் எங்களை 'வருக' என்று அழைத்தது மடாலயத்தின் நுழைவு வாயில்.

ஆம். அந்த வாயில்தான் தருமபுர ஆதீன ஆளுகையின் கோட்டை வாயில்.

உள்ளே நுழைகிறோம். வலப்பக்கம் பரந்த தெப்பக்குளம். வாயிலின் நேர் உள்ளே பெரிய கலையரங்கத்தை ஒட்டி, தொன்மை வாய்ந்த நூலகம்.

இதுவரை நாம் கண்டிராத ஏட்டுச் சுவடிகள். பழம்பெரும் காப்பிய நூல்கள் எண்ணற்று அடுக்கி வைக்கப்பட்டு உள்ளன. பல்கலைக் கழகங்கள், பெரிய நூலகங்கள் எதிலும் இல்லாத அரும் பெரும் நூல்களும் இடம் பெற்று உள்ளன.

தமிழ், ஆங்கிலம், வடமொழி, மராத்தி, பெர்சியன், இந்தி, இத்தாலி, உருது, அரபி, ஹீப்ரு இப்படி 20-க்கும் மேற்பட்ட மொழிகளில் 12 ஆயிரத்துக்கும் அதிகமானநூல்கள் நூலகத்தை நிறைத்துள்ளன.

"தமிழ் வளர்க்கும் தருமபுரம்" என்ற அடைமொழியைப் பறைசாற்றிக்கொண்டு இருக்கும் நூலகத்தைத் தாண்டிச் செல்கிறோம். அது மடத்தின் உள்பகுதி.

அந்தப்பகுதியைக் கடந்தபோது வலதுபகுதியில் மடத்தின் பூஜா மூர்த்தி சொக்கநாதசுவாமி பூஜைமடம் அமைந்துள்ளது. நேர் உள்ளே சென்றல் பெரியஹால். அதில் இதுவரை ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த மடாதிபதிகளின் திருவுருவப்படங்கள், ஓவியங்கள் கண்ணைக் கவருகின்றன.

அடுத்து, பரந்து விரிந்த மண்டபம். மடத்தின் ஊழியர்கள் தரையில் விரிக்கப்பட்ட பாயில் உட்கார்ந்து பணியாற்றும் பாங்கே தனி. மடத்தின் நிர்வாகியிடம் "ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை 'மாலைமுரசு' தீபாவளி மலருக்காக விசேஷ பேட்டி காண வந்திருக்கிறோம்" என்ற விவரத்தைத் தெரிவிக்கிறோம்.

"சுவாமி பூஜையில் இருக்கிருர். பூஜை முடிந்தபின் அனுமதி பெற்றுப் பார்க்கலாம்" என்கிருர் நிர்வாகி. "அதுவரை நீங்களும் பூஜையில் கலந்துகொள்ளலாமே" என்று எங்களையும் சொக்கநாதர் சந்நிதிக்கு அழைத்துச் செல்கிருர். அங்கே ஓதுவார்களின் தேவார இசை முழக்கம் கேட்கிறது.

பக்திப் பரவசம் !

அங்கேகாணுகின்றகாட்சி அனைவரையும்பக்திப்பரவசத்தில் மூழ்கடித்தது. சொக்கநாத சுவாமிக்கு ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் பூஜைநடத்துகிருர்.

அருகில் சில சீடர்கள் உதவிக்கு நிற்கிருர்கள். வெளியின் தம்பிரான்கள் (மடாதிபதிக்கு அடுத்தடுத்த நிலைகளில் உள்ள வர்கள்). அவர்களை அடுத்து, பக்தர்கள்.

இடையிலே காவிஉடை; அதனைச்சுற்றிக்காவிச் சுற்றுடை. கழுத்தில் உத்திராட்ச மாலைகள்; தலையில் ஜடாமுடி கிரீடம். அருள் பொங்கும் முகத்துடன் இருகை கூப்பி அமைதியே உருவான நிலையில் இறை வழிபாட்டைத் தொடங்குகிருர்.

காவி உடையில் கையைத் தலைக்குமேல் கூப்பிய நிலையில் தம்பிரான்கள். சட்டையில்லாமல் இடையில் துண்டைக் கட்டி இறைஅருள் பெற – மடாதிபதி ஆசி பெற, துடித்துநிற்கும் பக்தர்கள், இந்தத் தெய்வீகக்கலையில் மடாதிபதி பூஜை செய்யும் பாங்கேதனி.

அர்ச்சனையில் அவர் காட்டும் ஆர்வம், சிவனுக்கு மலர்களை அள்ளித்தூவும் அதிவேகம், தீப ஆராதனை காட்டும் பாங்கு அத்தனையும் அடியார்களை மெய்ம்மறக்கச் செய்கிறது. $1\frac{1}{2}$ மணி நேர பூஜைக்குப் பின் பக்தர்களுக்கு விபூதி வழங்குகிருர்.

அன்று சரசுவதி பூஜையாதலால் அடுத்தகணமே கலைமகள் ஆராதனை தொடங்கியது.

ஓலைச்சுவடிகளும், புத்தகங்களும் கலைமகள் வடிவத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தன. கலைமகளாக ஆவாகனம் (உருவாக்கிய) செய்யப்பட்டு, புனித நீரால் பாவனை அபிஷேகமும், ஆராதனைகளும் நடத்தப்பட்டன.

மடத்தில் உள்ள துப்பாக்கிகள், செங்கோல்கள், பல்லக்குகள் முதலானவற்றிற்கும் மடாதிபதி பூஜை செய்கிருர்.

அரிஜனங்களோடு மடாதிபதி!

கலைமகள் பூஜையைத் தொடர்ந்து துர்க்கை அம்மன் தரிசனத்திற்கு மடாதிபதி சென்றார். அங்கு, சிவாசாரியார்கள் துர்க்கைக்கு 9 நாட்கள் யாகம்வளர்த்து அன்று நிறைவு பூஜை நடத்தினார்கள்.

அங்கே கூடியிருந்த பக்தர்களோடு தானும் ஒருவராக மடாதிபதி கலந்துகொண்டார். துர்க்கை பூஜையில் இதுவரை கண்டிராத நிகழ்ச்சி ஒன்றும் நடைபெற்றது.

அதுதான் இருபது அரிஜன நண்பர்கள் குளித்து, புத்தாடை அணிந்து, விபூதி பூசிய நெற்றியுடன் துர்க்கை முன்பு விழுந்து பக்தியுடன் சாமி கும்பிட்டார்கள். அவர்கள் அனைவரும் முஸ்லிம் மதத்திற்குச்சென்று மீண்டும் இந்துவாக மாற்றம்பெற இங்கே வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தோம்.

தாயைப்பிரிந்த குழந்தைகள் மீண்டும் இணைந்தது போன்ற உணர்ச்சியில் அவர்களுக்கு விபூதி, குங்குமம் கொடுத்து, மாலை அணிவித்து மடாதிபதி ஆசிவழங்கியகாட்சி அங்குக்கூடி இருந்த நூற்றுக்கணக்கான பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

9 மணிக்குத் தொடங்கிய பூஜை பிற்பகல் 1 மணிக்குத்தான் முடிந்தது. மடாதிபதி தனது அறைக்குத் திரும்புகிறார். திரும்பியதும் இந்து மதத்தில் மீண்டும் இணைந்த அரிஜனங்களுக்கு சமபந்தி விருந்து கொடுக்கக் கட்டளையிட்டார். விருந்து முடிந்ததும் அவர்களை அழைத்து ஆசி வழங்கி, பல அரிய கருத்துகளை அவர்களுக்குப் புரியும் விதத்தில் விளக்கினார்.

தொடர்ந்து பக்தர்கள் பலர் சந்தித்த வண்ணம் இருந்தனர்.

பிற்பகல் 2 மணிக்கு மடாதிபதியின் அழைப்பின்பேரில் உள்ளே சென்றோம்.

காலை 8மணிக்குத்தொடங்கிய பணிஇன்னும் முற்றுப்பெறாத நிலையிலும் எந்தச்சோர்வும் இன்றி, அருள் ஒளி பொங்கும் முகத்துடன் அமைதியே உருவாக "வாருங்கள்" என்ற அழைப்பு விடுக்கும் பாவனையில் தலையசைத்து வரவேற்கிறார்.

வந்த விவரத்தைத் தெரிவிக்கிறோம். "ரொம்ப மகிழ்ச்சி" என்கிறார். பேட்டி தொடங்கியது.

கேள்வி : முஸ்லிம் மதத்தில் சேர்ந்த அரிஜனங்கள் இன்று உங்கள் முன் இந்து மதத்தில் இணைந்து இருக்கிறார்களே......?

பதில் : இன்னொரு மதத்தின் மீது பற்று ஏற்பட்டு அதில் சேரவில்லை. எதையோ எதிர்பார்த்துச் சென்று இருக்கிறார்கள். எதிர்பார்த்தது கிடைக்கவில்லை. அவர்கள் தாய் மதத்தை விட்டுப் பிரிந்து சென்றதைப் பெரிய இழப்பாகக்கருதி மீண்டும் வந்து இருக்கிறார்கள்.

கடவுள் கட்டளை !

நாட்டில் ஏற்பட்டு வரும் மதமாற்றங்கள் கடவுளின் கட்டளை. இவ்வாறு மத மாற்றம் ஏற்பட்டிருக்காது போனால் இந்துக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு இருக்காது.

கே : மதமாற்றத்திற்கு ஜாதிக் கொடுமை காரணமா ?

ப : ஜாதி இந்துக்கள் கொடுமையே காரணம் என்றும் சொல்லுகிறார்கள். பெரிய அளவில் பண மாற்றங்கள் மத மாற்றத்தை ஊக்குவிப்பதாக இன்னொரு சார்ரார் கூறுகின்றனர். ஜாதிப்போராட்டங்கள் ஒருகாரணம் என்பது மற்றொரு கருத்து. காரணம் எதுவாக இருந்தாலும் மத மாற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் நம்மவர் எல்லோருக்கும் உண்டு.

கே : ஜாதி ஒழிப்புக்கு உங்களைப் போன்றவர்கள் (மடாதிபதிகள்) ஏதேனும் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ப : ஜாதி ஒழிப்பு என்பது இயலாத ஒன்று. மனித சமுதாயத்தில் மட்டும் இன்றி, மிருக இனத்திலும் மற்ற மர வகைகளிலும் கூட இருக்கிறது. யானையை எடுத்துக்கொண்டால் அதில்கூட உயர்ந்த ஜாதி - தாழ்ந்த ஜாதி என்று சொல்கிறார்கள்.

தாழ்ந்து இருப்பவர்கள் என்றும் அப்படியே இருக்க வேண்டும் என்பது அல்ல. அவர்கள் உயர்ந்தவர்களாக வரவேண்டும். ஜாதி வேறுபாடு பாராட்டவே கூடாது. இந்த வேறுபாட்டைப் பாராட்டாமலே இந்து சமயம் காலம் காலமாகவே சிறப்புடன் இயங்கி வந்துள்ளது. இதற்கு ஆதாரம் சைவ - வைணவ சமயங்களில் அரிஜனங்களுக்கு உயர்ந்த இடம் அளிக்கப்பட்டு உள்ளதை நாயன்மார்கள், ஆழ்வார்கள் வரலாறுகள் கூறும்.

கே: அரிஜனங்களை அர்ச்சகராக நியமிக்க வேண்டும் என்கிறார்களே?

ப: அது முக்கியமல்ல. அவர்கள் உயர்வுதான் முக்கியம். இன்று அர்ச்சகராக இருப்பவர்கள் கூட, மிகத்தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். ஒரு சில அர்ச்சகர்களிடம்தான், தான் உயர்ந்தவர் என்ற மனப்பான்மை இருக்கலாம். அது கூடாது.

அரிஜனங்கள் அர்ச்சகர்களாகி விடுவதால் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு விட்டதாகிவிடாது. அதனால் அவர்கள் முன்னேறவும் முடியாது. மற்ற இந்துக்களை மதித்து நடத்துவது போல் நடத்தினால் போதும்.

நாடார் சமுகத்தின் முன்னேற்றம்!

கே: அப்படி என்றால் அரிஜனங்கள் முன்னேறுவதற்கு வழி என்ன?

ப: கடினஉழைப்பு. கல்விஅறிவு. உதாரணமாக 100, 150 ஆண்டுகளுக்கு முன்பு நாடார் சமுகத்தினர் மிகவும் சமுகத்தில் புறக்கணிக்கப்பட்டு இருந்தனர். கோவில்களில்கூட அவர்கள் நுழைய முடியாது. ஆனால் இன்று அவர்களது நிலை என்ன? அதற்குக் காரணம் என்ன? அரசாங்க உதவியே இல்லாமல் கடினமாக உழைத்தார்கள். கஷ்டப்பட்டு, பிள்ளைகளைப்படிக்க வைத்தார்கள். இன்று சமுதாயத்தில் உயர்ந்து இருப்பதோடு பக்தர்களாகவும்இருக்கிறார்கள். அவர்கள்உயர்வுக்குக்காரணம் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த செல்வர்கள் தம் ஜாதியைச் சேர்ந்த மற்றவர்களை உயர்த்தவேண்டும் என்ற எண்ணமும் பக்தியும் தான்.

அதே போன்று அரிஜன சமுதாயத்தில் முன்னேறியவர்கள் மற்ற அரிஜனங்களுக்கு உதவ வேண்டும். அரிஜனங்களுக்கு அரசாங்க உதவி இருக்கிறது. இதை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

கே: அரிஜன முன்னேற்றத்திற்கு மற்ற முன்னேறிய வகுப்பினர் உதவலாம் அல்லவா?

ப: உதவலாம். உதவவேண்டும். அதேநேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்று நாட்டில் எத்தனையோ பெரிய பதவிகளில் அரிஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு என்ன?

முன்னேறிய அவர்களே அவர்களது சமுதாயத்தைப் புறக்கணித்து இருக்கும் துரதிர்ஷ்டவசமான நிலையைப் பார்க்கும் போது வேதனையாகத்தான் உள்ளது.

கே: அவர்களுக்காக நீங்கள் செய்யும் தொண்டு என்ன?

அரிஜன சேரிகளுக்குப் போவேன்!

ப: ஒவ்வொரு மாதமும் 2. வது ஞாயிற்றுக் கிழமைகளில் சேரிகளுக்குச் சென்று 1 நாள் முழுவதும்அங்குத் தங்கி அறிவுரைகளைக் கூறுவேன். அவர்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்: "கோவில்களிலும் அறநிலையங்களிலும்வழிபட அவர்களுக்கு எவ்விதத்தடையும் இல்லை. அவர்கள் தாராளமாக வந்து மற்றவர்களுடன் கலந்து வழிபாடு செய்ய வேண்டும். இந்து மதம் உங்கள் முன்னேற்றத்திற்கு ஒருபோதும் தடையாக இருந்தது இல்லை; இனியும் இருக்காது. ஏதோ ஒருகாரணத்திற்காக மதம் மாற்றம் என்று களங்கப்படுத்தி விடாதீர்."

கே: இந்து சமயத்தில் உள்ள மற்றவர்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: ஜாதி இந்துக்கள் ஒன்றுபட்டு அரிஜன சகோதரர்களை உயர்த்த வேண்டும். மீனாட்சிபுரம், நெடு நாட்களாக நாம் உறங்கிய உறக்கத்திற்குப் பின் நமக்கு ஏற்பட்டு இருக்கும் அதிர்ச்சி மிக்க சவால். இதைப் புரிந்து கொண்டு அரிஜன சகோதரர்களிடையே உள்ள பிரச்சனையைப் பேசித் தீர்ப்பீர்.

கே; மதம் மாற்றம் குறித்து முஸ்லீம் அறிஞர்களைச் சந்தித்துப் பேசுவீர்களா?

ப: முஸ்லிம்அறிஞர்களையும் கூட்டிச்சமாதான முறையில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண அவர்களுடைய ஒத்துழைப்பையும் கோர இருக்கிறேன். இன்று முஸ்லிம்களாக இருக்கும் சகோதரர்கள் ஒரு காலத்தில் இந்து மதத்தில் இருந்தவர்களே.

அவர்களுக்கு ஒரு வேண்டுகோள்: "இந்துசமயத்தைச் சார்ந்த இரண்டுவகுப்பினர் தங்களுக்குள் கருத்து வேற்றுமை கொண்டு உங்களை அணுகும்போது அவர்களிடையே உள்ள பிணக்கைக் குறைத்து இணைந்துவாழ உதவ வேண்டுமே தவிர மத மாற்றம் ஏற்பட வழி செய்யக்கூடாது."

கே : மத மாற்றத்திற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

ப : மதச் சார்பற்ற அரசு என்று கூறிக்கொண்டு யார் எங்கே போனால் நமக்கென்ன என்ற நிலையில் இல்லாமல் மத மாற்றத்தைத் தடுக்கச் சட்டம் கொண்டுவர வேண்டும்.

இந்துக்கள் மெஜார்ட்டி இழந்தால்....;

மொரார்ஜி தேசாய் மற்றும் இ. காங்கிரஸ் தலைவர்களில் சிலர் (பூண்டி வாண்டையார் உள்பட) ஆர். எஸ். எஸ். இயக்கத் தலைவர் போன்றவர்கள் " மத மாற்றத் தடைச்சட்டம் கொண்டு வராது போனால் இந்துக்கள் மெஜாரிட்டி இழக்க நேரிடலாம்; என்று அப்படி நேரிடுகிறதோ அன்றே ஜனநாயகமும் சோசலிசமும் மதச்சார்பின்மையும் போய்விடும் " என்று கூறி இருக்கிறார்கள். இந்தக் கருத்து அரசு பரிசீலிக்க வேண்டிய ஒன்று.

மதம் மாற்றுகிறவர்களை அரசு எச்சரிக்க வேண்டும். அரசும் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும்.

கே : மடாதிபதிகளைக் கட்டுப்படுத்தத் தமிழக அரசு சட்டம்கொண்டு வந்து உள்ளதே.

ப : தமிழக அரசு கொண்டு வந்திருப்பது வருந்தத்தக்க அவசரத் திருத்தமாகும். மடங்கள் சிறுதவறுகள் செய்யவில்லை என்று கூறவில்லை. சிறு தவறுகள் ஏற்படுவது இயற்கையே. அதற்கு நடவடிக்கை எடுக்க இப்போது இருக்கும் சட்டத்திலேயே வகை இருக்கிறது.

1927-ம் ஆண்டு கொண்டுவந்த அறநிலையச் சட்டத்தில் அறநிலையங்களில் (மடங்கள் உட்பட) தவறு காணப்பட்டால் அறநிலையத்துறை, தலைமை அதிகாரி (ஆணையர்) நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து தீர்வுகாண வகை செய்யப்பட்டு இருக்கிறது. அதை இன்றைய அரசு " அறநிலையங்கள் மீது குற்றம்சாட்டுபவரும் ஆணையரே; அதை விசாரித்துத் தீர்ப்பு வழங்குபவரும் ஆணையரே," என்று விந்தையான திருத்தத்தை நிறைவேற்றி இருக்கிறது.

ஜனநாயகம் வேரூன்றி நிலைக்க இச்சட்டத் திருத்தம்-ரத்துச் செய்யப்பட வேண்டும்.

அமைச்சர் சிந்திக்க வேண்டும்!

அறநிலையத்துறை அமைச்சர், மடங்களின் மீது வெளிப்படையாகக்கூறமுடியாத கசப்புஉணர்வுகாரணமாக மடங்கள் மீதும், மடங்களின் தலைவர்கள் மீதும் தரக்குறைவான விமாசனங்களில் ஈடுபட்டுவருகிறார். இதனால் நாட்டுக்கு நன்மை பயக்குமா என்பதை அமைச்சர் சிந்திக்க வேண்டும்.

மடாதிபதிகள் என்ன மோசடியா செய்துவிட்டார்கள்.

இடிந்த கோவில்கள் எண்ணாயிரம்!

இன்று அறநிலையத்துறை ஒழுங்காக நடக்கிறதா? தேசிய நெருக்கடிநிலை வந்த போது பல கோவில்களில் கிராம அதிகாரிகள் தற்காலிக அறங்காவலர் பொறுப்பில் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் கிராம அதிகாரிகளின் வேலையைப் பறித்துக் கொண்டுவிட்ட பின்னரும் கோவில்களுக்குப் புதிய அறங்காவலர்களைப் போடாமல் கிராம அதிகாரிகளிடம்தானே பல கோவில்கள் இருக்கின்றன.

இடிந்த கோவில்கள் எண்ணாயிரம் இருக்கின்றன. பூஜை இல்லாமல் பல கோவில்கள் பூட்டிக் கிடக்கின்றன.

அவற்றைக் கவனிக்காமல் வசதி உள்ள கோவில்களுக்கு மட்டும்தானே அறங்காவலர்களைப் போட்டிருக்கிறார்கள்.

வசதி படைத்த கோவில்களில் தான் உங்கள் பணி நடக்குமா?

பாழடைந்த கோவில்கள் அனைத்தையும் புதுப்பிக்க மாவட்ட அளவில் திருப்பணி கமிட்டிகளை அமைத்து அரசு செயல் பட வேண்டும்.

அரசியல் வாதிகள் அரசோச்சுபவர்கள் ஆதீனத்திற்கு வரட்டும்; வரவேற்கிறோம். ஆனால் பொதுமேடைகளில் எங்களைப்பற்றித் தரக்குறைவாகப்பேசி எங்களை அரசியலுக்கு இழுக்க வேண்டாம்.

இவ்வாறு மடாதிபதி கூறியதும் பேட்டியை முடித்து விடை பெற்றோம்.

— நன்றி. மாலைமுரசு (திருச்சி)
25—10—81

வாகீசர் வாக்கில் தூது இலக்கியம்

திருச்சி புலவர் திரு. மு. வைத்தியநாதன்

தூது விடுதல் :

நால்வர் பெருமக்கள் இறைவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் பாவித்துப் பாடியுள்ள பாடல்களில் சில சங்க இலக்கியங்களில் காணப்படும் காமம்மிக்க கழிபடர் கிளவிகள் போல் உள்ளன. அவர்களின் அருந்தமிழ்ப் பாடல்களில் காதலும் பக்தியும் பின்னிக் கிடக்கின்றன. அப்பெருமக்கள் தங்கள் உணர்வுகளை வெளியிடும் வகையில் அன்னம், அன்றில், குருகு, குயில், கிளி, நாரை, வண்டு போன்றவைகளை தூது விட்டுள்ளனர்.

உளவெளிப்பாடு :

இவ் அஃறிணைப் பொருட்கள் ஒருவர் கூறுவனவற்றை அறிந்து, அவற்றிற்கேற்றபடி நடக்கும் உணர்வு அற்றவை யாயினும், அவற்றை முன்னிலைப்படுத்தி உரைப்பதை, ஒரு மரபாகக் கொண்டு பாடியுள்ளனர். தூது செல்லும் அஃறிணைப் பொருட்கள், தம்மிடம் திரும்பிவந்து, செய்தி சொல்லா ஆயினும் "தம் உளவெளிப்பாடு உரைத்தலே" அவர்கள் கருதிய குறிப்புப் பொருளாகும்.

திருப்பழனம் :

அப்பரடிகள் தாம் அருளிச் செய்த திருப்பழனத்திருப் பதிகத்திலும், திருமருகல்திருப்பதிகத்திலும், திருப்புறம்பயத்திருத் தாண்டகத்திலும் அன்பிற் சிறந்த தலைவி, தன் தலைவனாகிய இறைவனிடம் குயில், நெய்தல், குருகு, தென்றல், நாரை, பூவை, மான் முதலிய அஃறிணை உயிர்களையும் பொருட்களையும் தூது அனுப்புவதுபோல் பாடியுள்ளார்.

குயிலினங்காள் சொல்லீரே !

திருக்குறள், தூது செல்பவர் நற்குடியில் பிறந்தவராக, அரசர் விரும்பும் நற்பண்பு உடையவராக, ஆராய்ந்து உரைக்கும் சொல்வன்மை உடையவராக, இனிமையாகப்பேசி நினைத்து வந்ததை முடிக்கும் ஆற்றலாளராக இருக்கவேண்டும்

என்று கூறும். அது புறப்பொருள் தூதர் இயல்பு. அகப்பொருள் தூது வகையில் அப்பரடிகள் தன்னைத் தலைவியாகப் பாவித்துக் கொண்டு தன் தலைவனாகிய இறைவனிடம், சொல்லிய வரிசையில் தவறாது கூவும் இயல்புடையதும், அவரால் விரும்பப் படுவதுமாகிய குயிலைத் தூது விடுக்கின்றார்

'குயிலினங்காள்! என் தலைவன் வண்டுகள் பண் மிழற்றும் திருப்பழனத்தில் உள்ளான். அவன் அழகிய மார்பிடத்தில் மணமலர்மாலைகள் காணப்படும். தலையில் இளம்பிறையைச் சூடியிருப்பான். அவனிடம் சென்று என் துயரங்களை எல்லாம் கூறுங்கள்' என்று வேண்டுகின்றார்.

"சொல்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே!
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்"

இதில், "குயிலினங்காள் சொல்லீரே" என்ற தொடரில் 'சொல்ல வேண்டும்' என்ற ஆசையும், 'சொல்ல மாட்டீர்களா?' என்ற ஏக்கமும் இழையோடுவதை நுண்ணிதின் உணர்ந்தால் அறியலாம்.

நெய்தல்களே! கூறுங்கள் :

திருப்பழனத்து மலர் சோலையில் கண்டகம், முண்டகம், தாழை முதலிய மலர்கள் மலர்ந்து மணம் பரப்பும். அவ்வூரில் உள்ள பூம்பொய்கையில் மலர்ந்துள்ள மலர்களில் தேன் உண்ண வண்டுகள் வந்து சூழ்ந்திருக்கும். என் தலைவனாகிய கலைப்பித்தன் அங்கிருப்பான். அவன் 'பண்டரங்கம்' என்னும் கூத்து ஆடுதற்கேற்ற வடிவத்துடன் இருப்பான். அவனைக் காணாமையால் என் மென்தளிர் வண்ணம் மாறுபட்டு வருகிறது. என் நிலையைக் கேட்டால் விரைந்து வந்து விடுவான். எனவே, கண்டகங்காள்! முண்டகங்காள்! தாழைகாள்! நெய்தல்காள்! என் ஏக்க நிலையை அவனிடம் எடுத்துக் கூறுங்கள் என்கிறார்.

"கண்டகங்காள்! முண்டகங்காள்! கைதைகா ணெய்தல்காள்!
பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாந் தடமூழ்கி மற்றவனென் தளிர் வண்ணம்
கொண்டநா டறிவான் குறிக்கொள்ளா தொழிவானே."

என்பது அவர் பாடல்.

இளங்குருகே! கூருயோ?

'திருப்பழனத்திலுள்ள காஞ்சி மரங்களில் அமர்ந்துள்ள இளம் குருகுகளே! என் தலைவன்தான் என்னை மறந்து விட்டான். நீயுமா மறந்துவிட்டாய்? என் தலைவன், அந்தத் திருப்பழனத்தில், மதம் பெருகும் யானையின் தோலையுரித்துப் போர்த்துக் கொண்டிருப்பான். அவனைச் சுற்றி எப்பொழுதும் திருத்தொண்டர்கள் இருப்பார்கள். அவர்கள் என் தலைவனுடைய வீரச் செயல்களைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பார்கள். அத்தகைய என் தலைவன்பால் கொண்ட அன்பால் என் உள்ளமும் உடலும் சோர்ந்துவிட்டது. எனவே, இளங் குருகே! என் தவிப்பை அப்பெருமானிடம் தெரிவிப்பாய்!' என்று வேண்டுகிருர்.

மடநாராய்! தூது செல்லாய்!

நீலக்கடல், பொங்கும் இயல்புடையது. பேரோசையிடுவது. அக்கடலில் வாழும் உயிரினங்கள் பலவாகும். உயிரினங்கள் மட்டுந்தான? உயிர்த்தொகையோடு பயிர்த்தொகையும் அதை நம்பித்தான் வாழவேண்டியுள்ளது. அக்கடலில் இரை தேடும் செம்மையான கால்களையுடைய வெண்ணிற நாரையே! இனி மேல் என்னல் பிரிவினைப் பொறுத்திருக்க இயலாது. என் தலைவன் பிரிவால் திரண்ட அழகிய வளையல்கள் தானே கழன்று விட்டன. நீ சென்று, அவன் மார்பில் அணிந்திருக்கும் மணம் வீசும் பூங்கொன்றை மாலையையாவது பெற்றுவந்து, என்னிடம் கொடுக்க மாட்டாயா? என்று நாரையிடம் வேண்டுகிருர்.

"பொங்கோத மால்கடலில் புறம்புறம்போ யிரைதேடும்
செங்கோல்வெண் மடநாராய்! செயற்படுவ தறியேனன்
அங்கோல வளைகவர்ந்தா னணிபொழில்சூழ் பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத் தாரருளா தொழிவானே"

பூவைகாள்! புறப்படுங்கள்:

'பொன்னி நதிக்கரையில், பொன் கொழிக்கும் திருவூர் திருப்பழனம். அவ்வூர் சென்று என் தலைவனிடம் என் நிலைமை கூறமாட்டீர்களா? என் தலைவன் நினைப்பவர் நெஞ்சிலிருந்து, அவர்தம் குறைதீர்ப்பவன். அவர்கட்கு இன்பம் தந்து மகிழ் பவன் என்று அவனை அனைவரும் புகழ்கின்றனர். ஆனல், அவன் என் துன்பங்களைக் களைவதற்கு மாருக, என்னை ஏங்கச் செய்து கைவளையல்களையும் கவர்ந்துவிட்டான். ஏதும் அறியா தவன்போல் திருப்பழனத்தில் அமைதியாக உள்ளான்.

அவனிடம் என் வருத்தம் களைய வேண்டுங்கள் ; என்பது அவர் பாடற் பொருள்.

தலைவி கிளி வளர்த்தது ஏன் ?

தலைவி பசுங்கிளி ஒன்றை வளர்த்தாள். அதற்குப் பாலமுதூட்டினாள். பழங்கள் அளித்தாள். தன் உயிரினும் மேலாகப் பாதுகாத்தாள். பேசும் பயிற்சி அளித்தாள். பார்த்தவர்கள் அவள் செயலைப் பாராட்டினர். ஏன் இவள் இவ்வாறு செய்கின்றாள் ? என்று அவர்கள் எண்ணினர். ஒரு நாள், தான் பாலுஞ்சோறும் ஊட்டி வளர்த்த கிளியைத் திருமருகலில் உள்ள பெருமானிடம் தன் பொருட்டுத் தூது அனுப்ப முற்பட்டாள். அப்பொழுதுதான் அவள் கிளியை ஏன் அன்போடு வளர்த்தாள் என்பது ஊரில் வாழ்பவர்களுக்குப் புரிந்தது.

" ஓது பைங்கிளிக் கொண்பா லமுதூட்டிப்
பாது காத்துப் பலபல கற்பித்து
மாது தான்மரு கற்பெரு மானுக்குத்
தூது செல்ல விடத்தான் தொடங்குமே "

உலகம் முழுதுடையான் :

திருப்புறம்பயம் திருத்தாண்டகம் தலைவனுக்குத் தூதுவிடக் கருதிய தலைவி தோழிக்குக் கூறுவதாக அமைந்ததாகும். இறைவன் கையில் கபாலத்துடன் தெருவு தோறும் பலியேற்று வருகின்றான். தலைவி, அவன் அழகையும், அவன் பேசிய பேச்சையும் கேட்டுத் தன் நிலையை மறந்து நிறையழிந்து விடுகிறாள். நாள்தோறும் அவன் வரும்போது கண்டுமகிழ்வாள். அவன்வரவில்லையானால், ஆற்றாமல் தூதுவிட எண்ணுகிறாள், மீண்டும் நாள்தோறும் அவனைக்கண்டு மகிழ்கிறாள். உரையாடுகிறாள். அப்பொழுது அவன் தன் ஊரை வேறு வேறாகக் கூறுகிறான். அதைக் கேட்டதலைவி, தன்தலைவன் உலகமுழுதுமுடையான் என்பதை உணர்கிறாள். ஆனால், அவன்தன் ஊர் திருப்புறம்பயம் என்று கூறிப் பிரிந்துவிடுகிறான்.

முடிவுரை :

இவ்வாறு அப்பரடிகளின், திரும்பழனத்திருப்பதிகம், திருமருகல் திருப்பதிகம், திருப்புறம்பயத் திருத்தாண்டகம் போன்ற பதிகங்கள் தூது இலக்கிய வளர்ச்சிக்கு உதவியதுடன், அவர் உளவெளிப்பாட்டிற்கு வாயிலாகவும் இருப்பதை உணரலாம்.

வாசகர் கடிதம்

உண்மையறி வானந்த உருவாகும் பரசிவத்தை
    உள்ளம் வைத்துத்
திண்மையுடன் பூசித்து நன்நெறியைக் காட்டுகின்ற
    தெய்வச் சான்ரேய்,
அண்மையில் என் உடல்நலந்தான் குன்றியதை
    அறிந்தன்பின் அருமையான
வண்மையுடன் வேளூரின் பிரசாதம் அனுப்பிவைக்கும்
    வகையை ஓர்ந்தேன்,

தாய்மகவுக் கினியனவே செய்கின்ற பான்மையைப்போல்
    தயையே கொண்டு
தூயதொரு பிரஸாதம் அனுப்பிவைக்கச் செய்தஅன்பைத்
    துதித்துப் போற்றி
மேய இந்த அன்பினுக்கெந் நாளும்பாத்திரனுக
    விளங்கும் வண்ணம்
நாயனேயேன் இருப்பதுவே பயனென்று சிந்தித்து
    நயம்பெற் றேனே,

அருளினெடு பிரஸாதம் அனுப்பிவைக்கும்
    பெருமையினை அடியேன் எண்ணி
உருகுகின்றேன் ; இறைவனருள் வல்லபத்தால்
    நின்னுடைய உளத்தே நாயேன்
ஒருகுறையும் இல்லாமல் வாழ்ந்திடவே வேண்டுமெனும்
    உணர்வைத் தேர்ந்தேன் ;
தருமைமடா லயத்தினிலே தவச்செங்கோல்
    ஓச்சுகின்ற தனிச்சீர்த் தேவே,

சிவம்மணக்கும் தருமபுர மடாலயத்துத்
    தொண்டெல்லாம் சிறந்து வாழி !
நவம்மணக்கும் தமிழருமை யறிந்துயரச்
    செய்கின்ற நலங்கள் வாழி !
தவம்மணக்கும் சண்முகதே சிகப்பெருமான்
    மேன்மேலும் தழைத்து வாழி !
உவமனுக்கும் அகப்படாச்சிவசமயம்
    எஞ்ஞான்றும் ஓங்கி வாழி !

4—11—81.

கி. வா. ஜகந்நாதன்.

டாக்டர். தெ. ஞானசுந்தரம்,
எம். ஏ., பி. எச்டி.
தமிழ்ப்பேராசிரியர்,
கந்தசாமி நாயுடு கல்லூரி,
சென்னை – 600 102.

"கலையகம்"
149, அண்ணுநகர்
மேற்கு விரிவாக்கம்,
சென்னை – 600 101.
3—11—'81

பேரன்புக்கும் வழிபாட்டுக்குமுரிய திருப்பெருந்திரு குரு மகாசந்நிதானம் அவர்கள் பொன்னுர் திருவடிகளை மனமொழி மெய்களால் வணங்கி எழுதிக்கொள்வது.

தங்கள் நல்லாசியால், யான் சென்னைப் பல்கலைக் கழகத் திற்கு 24—12—80 – இல் அளித்த "வைணவ உரைவளம்" என்னும் ஆய்வுக் கட்டுரைக்கு "டாக்டர்" பட்டம் அளித் துள்ளனர்.

யான் ஆய்வு நிகழ்த்தற்கு நமது சென்னைக் கிளையிலிருந்த சில நூல்கள் பெரிதும் துணைபுரிந்தன என்பதனை நெஞ்சார்ந்த நன்றியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சைவத் திருமுறைகளுக்கும் அவ்வுரைகளைப்போன்ற உரைகள் வருதல்வேண்டும் என்பது என் பேரவா. அதுவே இந்த ஆய்வு நிகழ்த்த என்னைத் தூண்டியது.

தங்கள் பேரன்புக்கும் நல்லருளுக்கும் என்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

மாயூரத்தில் கடைமுகம்

காசிக்குச் சமமாக ஆறுதலங்களைக் கூறுவர். அவற்றுள் ஒன்று மாயூரம். அம்பிகை மயிலுருவாய்ப் பூசித்த இத்தலத் திற்குச் சிறப்புத்தரும் விழா கடைமுகம். துலாமாதமாகிய ஐப்பசிமாதம் முழுவதும் இத்தலத்தில் துலாக்கட்ட த்தில் இடப தீர்த்தம் எனப்படும் காவிரித்துறையில் நீராடினோர் கங்கையில் நீராடிய பயன்களைப் பெறுவர். கங்கை சிவபெருமானிடம் சென்று பக்தர்கள் தன்னிடம் மூழ்கித் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்கின்றனர். தன்பால்சேர்ந்த அப்பாவங்கள் தீர அருள்புரியுமாறு வேண்ட, பெருமான் மாயூரம்சென்று துலாக் கட்டத்தில் ஐப்பசிமாதம் முழுதும் நீராடினுல் உன் பாவம் தொலையும் என்று அருள்புரிந்தார். கங்கை அவ்வாறே இத் தலத்திற்குவந்து ஐப்பசித் திங்கள்தோறும் நீராடிப் புனிதம் பெற்றுவருகின்றது என்று கூறுவர். இவ்வாண்டு கடைமுகம் 15—11—81 ஞாயிற்றுக்கிழமை அன்று வருகிறது. அன்பர்கள் பலரும் கடைமுகநாளில் காவிரியில் நீராடி இறை அருளால் எல்லா நலங்களும் பெறுவார்களாக.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
கருங்குயில்நாதன்பேட்டை

கார்த்திகைஞாயிறு விழாச் சிறப்பு

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறந்து விளங்கும் இத்தலம், மாயூரத்திற்கு வடகிழக்கில், மாயூரம் - பூம்புகார் கற்சாலையில், காவிரியின் வடகரையில், தருமபுரத்திற்குவடபால் விளங்கித் திகழ்வது.

தலச்சிறப்பு :- சப்தமாதர்களில் வாராகி இங்கு சக்திபுரீசுவரரை வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது. இறைவன் கருணை என்றும் விளங்கும் திருத்தலமாகிய காரணத்தால் இந்திரன்வேண்டுகோளின்படி கருணாபுரம் என்றும், தக்கயாகத்தில் நிகழ்ந்த தண்டனைக்கு அஞ்சிய இந்திரன் கருங்குயில் நாதன்பேட்டை என்றும் வழங்கப்பெறுகிறது. முகில் - மேகம் நாதன் - தலைவன. மேகங்களுக்குத் தலைவன் இந்திரன்; அவனால் வழிபடப்பெற்றதால் கருமுகில்நாதன்பேட்டை எனவும் பெயர்பெறும்.

மூர்த்திச் சிறப்பு :- இறைவன் சக்திபுரீசுவரர். இறைவி ஆனந்தவல்லி. சப்தமாதர்கள் சந்நிதியும் உண்டு. மாயூரத்தைச் சூழவுள்ள சப்தமாதர்கள் வழிபட்ட சப்தபுரங்களில் இத்தலமும் ஒன்றாகும்.

தீர்த்தச்சிறப்பு:- 'கருணாதீர்த்தம்' என்றபெயருடன் திருக்கோயிலின் தென்பால் விளங்குகின்றது. தட்சயாகத்தின்போது வீரபத்திரதேவரின் தண்டனைக்கு அஞ்சிக்கருங்குயில் வடிவாகிப் பறந்துசென்ற இந்திரன், சிவநிந்தனாகிய தக்கன் அளித்த அவியை உண்ட பாவம்தீர இத்தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபட்டுத் தன் பாவம் தீரப்பெற்றான். தொழுநோய் பற்றப்பட்ட அந்தணன் ஒருவன் இக்கருணாதீர்த்தத்தில் நீராடி, பெருமானை வழிபட்டுத் தன்நோய் நீங்கப்பெற்றான். தோல் சம்பந்தமான நோய்கள் பலவற்றையும் தீர்க்கும் நலம் உடையதாய் இன்றும் இத்தீர்த்தம் விளங்கிவருகிறது.

கார்த்திகைஞாயிறு விழா :- ஆண்டுதோறும் கார்த்திகைமாதத்து ஞாயிற்றுக்கிழமைகளில் இத்தலத்து இறைவர் ஸ்ரீ சக்திபுரீசுவரர் பரிவாரங்களுடன் எழுந்தருளித் தருமபுரத்துக்கு எதிரில் காவிரியின் வடகரையில் போந்து தீர்த்தம் கொடுத்தருளுவார். இப்பெருவிழாவில் மாயூரத்தைச்சுற்றியுள்ள கிராம மக்கள் பலர் கலந்துகொண்டு இத்தீர்த்தத்தில் நீராடி இருமைப் பயன்களும் எய்தி இன்புற்று வருகின்றனர்.

திருநாலூர்மயானம், திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்
தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

இவ்விருதலங்களும் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்துக்குத் தென்கிழக்கே உள்ள குடவாசலை அடுத்துள்ளன. சோழவளநாட்டுக்காவிரித் தென்கரைத்தலங்களில் 96, 97-வது தலங்களாக எண்ணப்படுவன.

1. திருநாலூர்மயானம்

கும்பகோணத்திலிருந்து திருக்குடவாசல் பெருந்துச்சாலையில் 14½ கி. மீ. தூரத்தில் திருச்சேறையை அடுத்து உள்ளது இத்தலம். குடவாசலிலிருந்து 4½ கி. மீ. தூரம் வடகிழக்கில் உள்ளது. நாலூர், நாலூர்மயானம் ஆகிய இரண்டு தலங்களாக இவை உள்ளன. தேவாரத்தில் இடம்பெற்ற நாலூரை வைப்புத் தலமாகவும், நாலூர் மயானத்தைத் திருப்பதிகம் பெற்ற திருத்தலமாகவும் கொள்ளலாம். அப்பர் தேவாரப்பாடல் ஒன்றிலும் (6-71-4) சுந்தரர்தேவாரப்பாடல் ஒன்றிலும் (7-31-6) நாலூர் குறிக்கப்படுகின்றது. ஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகத்துள் நாலூர்மயானம் கூறப்படுதலைக் காணலாம். நாலூர் பேருந்துச்சாலையில் உள்ளது. நாலூர்மயானம் 1 கி. மீ. தூரம் கிழக்கில் உள்ளது. சோழர்காலத்தில் சதுர்வேதிமங்கலமாக இருந்த இவ்வூர் தமிழில் நால்வேதியூர் எனவழங்கத் தொடங்கி நாலூர் என மருவியதாகலாம்.

நாலூரில் உள்ள கோயில் முதற் பராந்தக சோழனல் கட்டப்பட்ட மாடக்கோயில். நாலூர் மயானக்கோயில் முதல் ஆதித்த சோழன் முதலிய பல சோழமன்னர்களின் திருப்பணிகளைப் பெற்றது.

நாலூர் :

நாலூரில் உள்ள இறைவர் சம்பாரீசுவரத்துப் பெருமான் அடிகள் என்றும் மகாதேவர் என்றும் கல்வெட்டுக்களில் புகழப்படுகின்றார். தற்போது இவர் பலாசவனநாதர் என வழங்கப்படுகின்றார்.

'திருநறையூர் நாட்டுத் தென்கரைப் பிரமதேயமான அக்கிராமக் கோட்டச் சதுர் வேதிமங்கலத்து ஊர்ச்சபையாரால் முதற் பராந்தகனுடைய நான்காவது ஆண்டில் இக்கோயிலுக்கு நன்கொடையொன்றும், சுந்தர சோழனுடைய பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் இக்கோயிலுக்குப் பல நன்கொடைகளும் வழங்கப்பட்டன என்றும், இராசராசனுடைய இருபத்து நான்காம் ஆட்சியாண்டுக்கு முன் அவன் பெயரால் ஒரு பெரிய மண்டபம் எடுப்பிக்கப்பட்டது' என்றும் முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் என்றநூலில் திரு. S. R. பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். நாலூர்க்கோயில் நன்கு புதுப் பிக்கப்பெற்று மாடக்கோயிலாக விளங்கிவருகிறது.

கோயிலமைப்பு :

பேருந்துச் சாலைக்கு அருகில் கோயில் உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி. எதிரே திருக்குளம் உள்ளது. படிக்கட்டுக் களில் ஏறியவுடன் மகாமண்டபம்; அம்பாள் தெற்குநோக்கி விளங்குகிறார். மலைமேல் சிறிய பிராகாரம் உள்ளது. கன்னி மூலையில் விநாயகரும் தெற்கே தக்ஷிணாமூர்த்தியும் சண்டேசரும் உள்ளனர். விமானம் அரைவட்ட வடிவில் கஜப்பிருஷ்ட விமானம் என்றபெயரோடுவிளங்குகிறது. சுவாமி சுயம்புமூர்த்தி. திருமேனியில் இரேகைகள் பல உள்ளன. சுவாமியின் திருப் பெயர் அருள்மிகு பலாசவன நாதர். அம்மையின் திருப்பெயர் அருள்மிகு பெரியநாயகி. தலமரம் பலாசமரம்.

பிறையூரும் சடைமுடியெம் பெருமான் ஆரூர்
　　பெரும்பற்றப் புலியூரும் பேராவூரும்
நறையூரும் நல்லூரும் நல்லாற்றூரும்
　　நாலூரும் சேற்றூரும் நரையூரும்
உறையூரும் ஒத்தூரும் ஊற்றத்தூரும்
　　அளப்பூர் ஓமாம்புலியூர் ஒற்றியூரும்
துறையூரும் துவையூரும் தோழூர்தானும்
　　துடையூரும் தொழஇடர்கள் தொடராவன்றே.

— அப்பர்.

திங்களூர் திருவாதிரையான் பட்டினமூர்
நங்களூர் நறையூர் நனி நாலிசை நாலூர்
தங்களூர் தமிழான் என்று பாவிக்க வல்ல
எங்களூர் எய்தமான இடையாறு இடைமருதே.

— சுந்தரர்.

என்ற பாடல்களை ஓதிவழிபடுவோம்.

நாலூர்மயானம் :

நாலூருக்குக் கிழக்கே உள்ளது நாலூர்மயானம். மயானம் என்ற பெயருடைய தலங்கள் நான்கு. அவை காழி மயானம், வீழி மயானம், கச்சி மயானம், நாலூர் மயானம் என்பனவாகும். நாலூர் மயானம் அழகிய சிறிய கிராமம். சோழர் காலக் கலைச் செறிவோடு இங்குள்ள கோயில் விளங்குகிறது. திருஞான சம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றைப்பெற்ற சிறப்புடையது. ஆபத்தம்ப முனிவர் பூசித்தது. நான்கு வேதங்களும் வழிபட்ட சிறப்பினது. இலிங்கத்தின் திருமுடியில் சில வேளைகளில் பாம்பு ஊர்வதாகக் கூறுகின்றனர். திருஞானசம்பந்தர் 'பாலூரும் மலைப் பாம்பும், பனிமதியும் மத்தமும், மேலூரும் செஞ்சடை யான்' என்று கூறியருளுவதை இதற்கு ஆதாரமாகக் காட்டு கின்றனர்.

கோயிலமைப்பு :

கிழக்கு நோக்கிய சந்நிதி. எதிரே ஞானதீர்த்தம் உள்ளது. இராஜகோபுரம் இல்லை. வாயிலில் நந்திதேவர் உள்ளார். பஞ்ச மூர்த்திகளை உடைய கட்டைக்கோபுரவாயிலைக் கடந்தவுடன் பெரியபிராகாரம். கோயில் திருப்பணி செய்விக்கப்பெற்று வருகிறது. பிராகாரங்களில்உள்ள மூர்த்திகளின் திருவுருவங்கள் தனியே எடுத்து வைக்கப்பெற்றுள்ளன. மேற்குப்பிராகாரத்தில் சிவலிங்கத் திருவுருவங்கள் உள்ளன.

வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுரர் மிக்க கலையழகு உடையவராய்க் காட்சி தருகிறார். கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி மண்டபம் உள்ளது. கோஷ்டங்களில் தெற்கே விநாயகர், இடபாரூடர், நடராஜர், தக்ஷிணாமூர்த்தி ஆகியோரும் மேற்கே மகாவிஷ்ணுவும் வடக்கே பிர்மா, துர்க்கை ஆகியோரும் உள்ளனர்.

சுவாமிகோயில் மகாமண்டபம் அம்பாள் கோயிலையும் இணைத்துள்ளது. அம்பாள் தெற்கு நோக்கி விளங்குகின்றார்

இரண்டாம் கோபுரம் மூன்று நிலைகளோடுள்ளது. மகா மண்டபத்தைக் கடந்து ஸ்நபனமண்டபம் செல்லும் முன் வாயிலின் இருபுறமும் விநாயகர் முருகன் ஆகியோரைத் தரிசிக்கலாம். இடதுபக்கம் சூரியன் மகாவிஷ்ணு சனிபகவான் உள்ளனர். வாயிலைக்கடந்து உள்ளே சென்றால் சுவாமி சந்நிதியின் வாயிலில் துவாரபாலகர் உள்ளனர். எதிரே நந்திபலி பீடங்கள் உள்ளன. சுவாமி சிறிய திருமேனியோடு விளங்கு கின்றார். ஞானசம்பந்தர் உளம் உருகி இத்தலத்து இறைவரைப் போற்றிய பதிகத்தை ஓதிவழிபடுவோம்.

கறையார் மணிமிடற்றான் காபாலி கட்டங்கன்
பிறையார் வளர்சடையான் பெண்பாகன் நண்பாய
நறையார் பொழில்புடைசூழ் நாலூர் மயானத்தெம்
இறையான்என்று ஏத்துவார்க்கு எய்துமாம் இன்பமே.

என்பது இத்தலத்திருப்பாடல்களில் ஒன்று.

சுவாமியை வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம். அம்பாள் அழகிய திருவுருவுடையவர். அருள்நலம் கனிந்த திருநோக்கினர். வழிபடுவோம்.

மூர்த்திகள் :

சுவாமி திருப்பெயர் அருள்மிகு ஞானபரமேசுவரர். அம்பாள் திருப்பெயர் அருள்மிகு ஞானம்பிகை. தீர்த்தம் ஞான தீர்த்தம்.

கலைச் சிறப்பு :

சோழர்காலத்து ஏகதளக் கற்றளியாகிய இக்கோயில் மிக்க கலையழகுடையது. சோழர்காலக் கலைப்பாணியைச் சேர்ந்தது. முதல் ஆதித்தன் காலத்துத் திருப்பணியைப் பெற்றது. கருவறை சதுரமானது. சிகரம் உருண்டை வடிவுடையது. தூண்களும் போதிகைகளும் சிற்பஅழகு உடையவை.

கல்வெட்டு :

இக்கோவிலில் 22 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டு உள்ளன. எல்லாம் சோழர்களுடைய எழுத்துக்களே. 10, 11, 12, 13 நூற்றாண்டுகளில் நாலூர் என்பது செற்றூர்க் கூற்றத்துப் பிரமதேயம். சுவாமிபெயர் திருமயானத்துப் பரமசுவாமி

மூலத்தானத்து மகாதேவர், பிரமீசுரத்து மகாதேவர் என்று உள்ளன. மேலும் கோவிலில் அகத்தீசுவரரை உடைய கோவில் இருக்கிறது. அதற்குத் தனியாக ஆதாரங்கள் செய்யப் பட்டன. நாலூர் வானவன்மாதேவி சதுர்வேதிமங்கலம் என்ற பெயரும் பெற்றிருந்தது. நாலூரில் திருக்கச்சபீசுரத்துப் பெருமாள், காமபரமேசுரத்துப் பெருமாள், திருநாராயண விண்ணகரம் முதலிய தளிகளும் இருந்தன. நாலூரில் ஊர்ச்சபை இருந்தது. காவிரியின் தென்கரையில் செம்பியன்மாதேவி சதுர்வேதிமங்கலம் என்ற ஒரு ஊர் இருந்தது. கடைத்தெருவில் அங்காடிக்கூலி என்ற ஒரு வரி வசூலித்துக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. கோயிலுக்கு முன்னால் இராசராசன் என்ற பெயரில் ஒருபெரிய மண்டபம் இருந்தது. அதில் ஊர்ச்சபையார் கூடித் தீர்மானங்கள் செய்தனர். நாலூர் வியாபாரி நாரணன் சோழமகன் ஆன திருநாறக்காயன் 12 விளக்குகளுக்காக 12 ஈழக்காசுதந்தான். செம்பியன் குடவாயில் என்ற ஆலம்பொழில் பெண் ஒருத்தி இக்கோயிலுக்கு 2 விளக்குகளைத் தந்தாள். நாலூரில் ஒரு புளியமரத்தின்கீழ் ஊரார் கூடி, கோயிலுக்கு விரோதமாக இருக்கும் ஆட்கள் கிராமத்துரோகிகள் ஆகியோர் சிவனைத் தொடமாட்டார் ஆவார்கள் என்று தீர்மானம் செய் தார்கள். (இராசராசன் III காலம்.)

2 திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்
(ஆண்டான்கோயில்)

இத்தலம் குடவாசல் – வலங்கைமான் பேருந்து வழியில் உள்ளது. ஆண்டான்கோயில் என வழங்கப்படுகிறது. வலங்கி மானிலிருந்து கிழக்கே 2. கி. மீ. தூரத்தில் உள்ளது. பேருந்துச் சாலையிலிருந்து தெற்கே ½ கி. மீ. தூரம் சென்றால் கோயிலை அடையலாம்.

குடமுருட்டி ஆற்றின் பழம்பெயர் கடுவாய் என்பதாகும். புத்தூர் எனவழங்கும் ஊர்கள் பல இருத்தலால் வேறுபாடு தெரியக் கடுவாய்க்கரைப் புத்தூர் என இவ்வூர் வழங்கப் பெற்றது. இவ்வாறே அரிசிலாற்றங்கரையில் உள்ள புத்தூர் அரிசிற்கரைப் புத்தூர் என வழங்குவதைக் காணலாம்.

திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்திருப்பதிகம் ஒன்றைப் பெற்ற இத்தலம் காசிபமுனிவரால் பூசிக்கப்பெற்றது.

கோயிலமைப்பு :

நாட்டுக்கோட்டை நகரத்தாரின் சீரிய திருப்பணியைப் பெற்றுச்சிறந்துள்ள இக்கோயில் ஊரின்நடுவே கிழக்குநோக்கி விளங்குகிறது. கோயில் சந்நிதிக்கு வலது பக்கத்தில் திரிசூல கங்கை எனப்படும் தீர்த்தம் உள்ளது. ஐந்து நிலைகளை உடைய இராஜகோபுரம் கோயிலுக்கு அழகு சேர்க்கிறது. கோபுர வாயிலில் சித்திவிநாயகர் விளங்குகிறார். உள்ளே சென்றதும் வெளிப்பிராகாரம். சுவாமி சந்நிதியில் கொடிமரம் நந்தி பலிபீடங்கள் உள்ளன. அடுத்து, கருங்கல்லால் செய் விக்கப்பெற்ற முன்மண்டபம் கோயில் வாயிலை அலங்கரிக் கிறது. இரண்டாம் திருவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் பெட்டிபோலப் பாதுகாப்போடு தளம் பரப்பி அமைக்கப் பெற்ற முதற்பிராகாரத்தை அடையலாம்.

கிழக்கே சந்திரன், முசுகுந்தன், உரோமசமுனிவர், கண்டதேவர் உருவங்களும் தெற்கே சமயாசாரியர், சேக்கிழார் திருவுருவங்களும் உள்ளன. அடுத்து, தக்ஷிண கைலாசநாதர் உள்ளார். மேற்கே விநாயகர் சுப்பிரமணியர் மகாலக்ஷ்மி ஆகியோர் உள்ளனர். வடக்கே உத்தர கைலாசநாதர் விசுவநாதர் விசாலாக்ஷி உள்ளனர். அடுத்து நடராசர் சபை உள்ளது. அம்பாள்கோயில் தெற்குநோக்கி விளங்குகிறது. அடுத்து, பள்ளியறை உள்ளது. கிழக்கே நவக்கிரகங்களும் பைரவரும் சூரியனும் உள்ளனர். சுவாமி அம்பாள்சந்நிதி உயரமானமேடைகளில் விளங்குகின்றன. எதிரே நந்தி பலிபீடங்கள் உள்ளன.

சுவாமி கோயில் வாயிலில் துவாரபாலகரும் விநாயகரும் காட்சிதருகின்றனர். கருப்பக்கிருகத்தை அடுத்து அர்த்தமண்ட பம் உள்ளது. சுவாமி அழகிய திருவுருவோடு நம் நெஞ்சைக் கவர்கின்றார். அப்பரடிகள் பாடியருளிய திருப்பதிகத்தை ஓதி வழிபடுவோம்.

மாத னத்தைமா தேவனை மாறிலாக்
கோத னத்தில்ஐந் தாடியை வெண்குழைக்
காத னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
நாத னைக்கண்டு நானுய்யப் பெற்றெனே,

என்பது இத்தலத் தேவாரத்திருப்பாடல்களில் ஒன்று.

அம்பாள்சந்நிதி தெற்குநோக்கி உள்ளது. அழகிய திருமுக மண்டலத்தோடு அன்னை சொர்ணம்பிகை விளங்குகின்றாள். புகழ்மிக்க இத்திருக்கோயிலின் வெளிப்பிராகாரம் மட்டும்

கீழ்த்தளவரிசை நிறைவேறப்பெறுமல் உள்ளது. அடியார் திருக்கூட்டங்கள் வந்து வழிபடாத நிலையால் கோயில் அழகியதாக இருந்தும் விளக்கம் குன்றியுள்ளது.

புராண வரலாறு :

திருவாரூரைத் தலைநகராகக்கொண்டு அரசுபுரிந்த முசுகுந்த மன்னன் தியாகேசரைப் பிரதிட்டை செய்து திருவாரூரில் சிவபக்திச் செல்வனுய் விளங்கிய காலத்தில் அம்மன்னனின் அமைச்சராய் விளங்கியவர் சுண்டதேவர் எனப்படுவார். அவர் இவ்வூருக்கு வந்த காலத்தில் இரவுப் பொழுது வந்தது. அமைச்சர் வன்னிவனமாயிருந்த இவ்வூரில் தங்கினுர். சிவ தரிசனம் செய்யாமல் உணவருந்தாத அவ்வமைச்சர் திருக் கோயிலைத் தேடினுர். அவ்வூரில் ஆலயமில்லை என்றறிந்து உணவருந்தாமல் கண்ணயர்ந்தார். அடியவர் பசித்திருக்கப் பொருத இறைவன் அவர்தம் கனவில் வன்னிமரக்காட்டிற்கு இடையே தாம் இருப்பதை உணர்த்த, அமைச்சர் மகிழ்வுடன் எழுந்து பெருமானைத்தரிசித்து உணவுண்டு மகிழ்ந்து, அப் பெருமானுக்குத் தாமே ஆலயமெடுத்து விழா நடத்தினுர். முசுகுந்தசோழன் அவர் செய்த தருமத்தைக் கேட்டபோது அமைச்சர் மறுக்க மன்னன் அவரது தலையைக் கொய்யுமாறு பணித்தனன். ஏவலரால் கொய்யப்பெற்ற அமைச்சர் தலை இறைவனடியை அடைந்தது. அதைக் கண்ணுற்ற சோழன் இறைவன் அடியவர்க்குத் தான் செய்த பிழைக்கு வருந்தித் தன்வாளால் தானே தன்தலையை அரிந்துகொள்ள முற் பட்டனன். பெருமான் காட்சியளித்து, சுண்டதேவரை எழுப்பி முசுகுந்தனுக்கும் காட்சி கொடுத்து அருள் செய்தார் என்பது இத்தலத்தைப் பற்றி வழங்கும் செவி வழிக்கதை. தன்தலையை அரிந்து கொள்ளும் நிலையில் முசுகுந்தனது உருவச்சிலை இடம் பெற்றுள்ளது.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு சொர்ணபுரீசுவரர். இறைவி திருப்பெயர் அருள்மிகு சொர்ணம்பிகை. தீர்த்தம் திரிசூல கங்கை. தலமரம் வன்னி.

அரக்க னுற்ற லழித்தவன் பாடல்கேட்
டிரக்க மாகி யருள்புரி யீசனைத்
திரைக்கொள் நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
இருக்கு நாதனைக் காணப்பெற் றுய்ந்தெனே.

கட்டுரை எண். 21.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit, D. P. P. A., D. U. N., I. U.

உறைகின்றநின் திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ, முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? என்றன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே! 20

அ. பூரணாசல மங்கலையே!

(1) முழுநிறைவும், நிலைமாறாத (அசையாத) மங்கலத் தன்மையும் உடையவளே என அழைக்கிறார்.

(2) என்றும் அழிவில்லாத ஈசனைத் தன் கணவனாகக் கொண்ட அன்னை என்றும் நிலைமாறாத மங்கலம் உடையவள். அதுவும் நிறைவுடன் கூடியதாகும். பெருவூழியின் முடிவிலும் அழிவில்லா இறைவனைப் பிரியாதுநிற்கும் மங்கலை அவள் அவளைப்போன்றமங்கலை அல்லது சுமங்கலிவேறுயாரும்இல்லை.

(3) என்றும் பூரணமாகவும், அசலமாகவும், மங்கலமாகவும் இருப்பவள். அதாவது முழுமையாக, அசைவின்றியும் மங்கல மாயும் இருப்பவள். ஆதலால் அவளை, சகஸ்ரநாமம் 'பூர்ணா' – முழுமையானவள் என்கிறது. அசலம் என்பது அசையாதநிலை யினைக் குறிக்கும். ஆகவே அசையாத மலையினையும் அசலம் என்றனர். இமயாசலம், தணிகாசலம், அருணாசலம், விருத்தா சலம் என்பன உதாரணங்கள்.

மற்ற மங்கலைகளின் மங்கலம் மறையக்கூடியது. நீங்கக் கூடியது. முழுமையற்றது. ஏதாவது ஒருவிதத்தில் குறையுடைய தாகவே இருப்பது. பூரணநிறைவும், அசையாததுமாகியநிலையும் உடையது அன்னையின் மங்கலம்.

(4) 'திரிபுரா ரகஸ்யம்' என்னும் நூலின்படி சக்திபீடங்கள் மூன்றாகும். அவற்றில் ஒன்று மேற்குக் கடற்கரையில் உள்ள பூர்ணகிரிபீடம் என்பதாகும். பூர்ணாசலமாகிய மலையில் பீடங் கொண்டுள்ள மங்கலை எனினும் ஆம்.

(5) அவ்வாறே நேபாள எல்லையில் சாரதாநதிக்கரையில் உள்ள பூரணகிரி என்றமலையும் சக்திபீடமாகக்கருதப்படுகிறது. மிகவும் மங்கலம் நிறைந்ததாகக் கருதப்படும் இம்மலையில் ஆதி சங்கரரால் ஏற்படுத்தப்பட்ட ஆலயமும் உண்டு. தூய்மை யற்றவர்கள் – அசுத்தமானவர்கள் செல்லாமலும், மரங்களை வெட்டாமலும் மிகப் புனிதமாகக் காக்கப்படும் பீடம் இப் பூரணாசலம்.

ஆ. உறைகின்றநின் திருக்கோயில் நின்கேள்வர் [ஒருபக்கமோ?

(1) நீ தங்கி வாழும் திருக்கோயில் நின் கணவராகிய சிவபெருமானது ஒருபக்கமா?

(2) கடவுள் தங்கும் இடம் எதுவாகிலும் அது கோயில் என்று கருதுதல் மரபு. அவ்வாறே அன்னைஎழுந்தருளும் எல்லா இடங்களுய திருக்கோயில்களே! எனினும் விசேஷமாக - சிறப்பாகத் தங்கிவாழும்இடங்களை வினவுகின்றார். 'காந்தார்த்த விக்ரஹா' - மணாளனைப் பாதி உடலாகக் கொண்டவள் என சகஸ்ரநாமம் புகழும். அவளைப்பாகத்தில் உடைமையால் இறைவனும் 'அர்த்தநாரி' என்றும் 'பாகம் பெண்ணுரு ஆனான்' என்றும் 'மாதொரு பாகன்' என்றும் பேசப்படுகிறான்.

(3) அன்னைக்கு ஐந்துவிதமான வடிவங்கள் உண்டு. கைகால் முதலியவற்றுடன் கூடிய உருவம் 'ஸ்தூலரூபம்' ஆகும். மந்திர மயமான வடிவம் "சூட்சுமரூபம்" எனப்படும். மூன்றாவது காமகலாரூபம் அல்லது சூட்சுமதரம் எனப்படும். குண்டலினி சக்தியின் வடிவமானரூபம் 'சூட்சுமதமம்' எனப்படும். எல்லாங் கடந்த பரம்பொருளான நிலையில் அன்னையும் "சுத்தப்ரம்ஹம்" என அழைக்கப் படுவாள். இறைவனின் மேனியில் பாகமானதைக் கூறி அவள் ஸ்தூல வடிவினில் எழுந்தருளும் திருக்கோயிலினைக் குறிப்பிட்டார்.

இ. அறைகின்ற நான் மறையின் அடியோ முடியோ?

(1) நின் புகழினை வலியுறுத்திப்பாடுகின்ற நான்கு வேதங் களின் அடிப்பகுதியா? அல்லது சிகரப்பகுதியா?

(2) "ஸத்யம் வத" - "உண்மை பேசு," "தர்மம் சர" - "தருமத்தை நடத்து" என்றெல்லாம் நீதிகளையும் இறையியல்பு களையும் வேதங்கள் கட்டளை வடிவில் வலியுறுத்திப் பணிக் கின்றன. 'அதுவே 'அறைதல்' எனப்பட்டது. 'வேத கோஷம்' என்ற வடசொல் வழக்கிற்கு நேரான தமிழக்கம் 'அறைகின்ற நான்மறை' என்ற சொற்றொடர்.

(3) அவ்வாறு கோஷமிடும் வேதத்தின் அடிபாகம் மூலமந்திரமாகிய பிராணவமாகும். அப்பிரணவமா உனது திருக்கோயில்? அல்லது அவ்வேதத்தின் உச்சியாக - 'சிரஸாக' உள்ள உபநிடதங்களா உனது திருக்கோயில்?

(4) அடி, நடு, முடி, அனைத்துமாய் அவள் இருப்பதனைப் "பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும்" என்ற பாட லிலேயே கூறியிருக்கிறார். "அருமறையின் முன்னாய், நடு எங்குமாய் முடிவாய முதல்வி" என்பார் பின்பும். எனவே அடியோ? முடியோ? என்ற வினாக்கள் அனைத்துமே நீதான் என்ற விடையினைச் சுட்டி நின்றது.

(5) மந்திர வடிவமான வேதத்தினைக் கூறி - பிரணவ - உபநிடதங்களைக் கூறி அவளது மந்திரமயமான சூட்சுமவடி வினையும் குறித்தார்.

ஈ. அமுதம் நிறைகின்ற வெண்திங்களோ ?

(1) அமுதம் நிறைந்திருக்கின்ற சந்திரமண்டலமோ?

(2) சந்திரமண்டலத்தில் அமுதம் நிறைந்திருக்கின்ற தென்பது நூன்மரபு. மற்றும் அமுதக் கிரணங்கள் பெற்றமை யாலும் அமுதம் நிறைகின்ற வெண்திங்கள் என்றார். 'வெண் திங்கள்' என்பது பூரணநிலவு. பௌர்ணமியன்று சந்திரமண்ட லத்தில் தேவியிருப்பதாகப் பாவித்து வழிபட்டால் ஆயுள் விருத்தி உண்டாகும் என்பது மேலோர் கருத்து.

(3) 'சத்ரமண்டல மத்யகா' - மதிமண்டலத்தின் நடுவில் உறைபவள் என சகஸ்ரநாமம் கூறும். குண்டலினியோகத்தில், சகஸ்ரகமலத்தில் அன்னை சிவத்துடன் தங்குகிறாள். சகஸ்ர கமலமே அமுதம் நிறைகின்ற வெண்திங்கள் ஆகும். ஏனெனில் அங்கு தேவியின் திருவடியிலிருந்து 'அமுதரஸம்' பெருகுகிறது.

(4) சந்திரமண்டலத்தினையே ஸ்ரீசக்கரமாகப் பாவித்து அன்னை திருக்கோயில் கொண்டிருப்பதாகக் கருதி வழிபடும்

முறையும் உண்டு. அந்த வகையில் இங்கு சூட்சுமதரவடிவம் கூறப்பட்டது.

உ. கஞ்சமோ?

(1) தாமரையிலா வாழ்கிறாய்?

(2) இங்கு வெண்கஞ்சமோ எனக் கூட்டி வெண்தாமரையில் அபிராமியே 'பிராம்மி' என்ற பெயருடன் எழுந்தருளுகிறாள் எனவும் பொருள் கொள்வதுண்டு.

(3) ஆனால் 'கஞ்சம்' என்பது மூலாதாரம் முதல்சகஸ்ராரம் ஈறாகவுள்ள தாமரைகளில் அன்னை எழுந்தருளும் நிலையினைக் குறிக்கவே பயன்படுத்திய சொல்லாகும். மூலாதாரம் முதல் அன்னையும் ஐயனும் வெவ்வேறு பெயர்களுடன் எழுந்தருளி, பிறகு சகஸ்ராரத்தில் காமேஸ்வரன் - காமேஸ்வரி என்ற வடிவில் காட்சிதருகின்றனர். அக்காட்சித் தரும் கஞ்சத்தைக் கூறுவதால் அன்னையின் 'காமகலா' ரூபம் குறிப்பிடப்பட்டது

ஊ. என்றன் நெஞ்சகமோ?

(1) எளியேனது நெஞ்சகமா?

(2) அன்னையின் ஐந்துவிதமான வடிவினையும் நெஞ்சின் உள்ளே உணரமுடிகிறது. அதற்கான ஆற்றலை அளிக்கும் அருள் பாலிப்பவள் அவளே. கஞ்சமோ என்ற சொல்லுக்கு இணையாக நெஞ்சமோ என்னாது "நெஞ்சு அகமோ?" எனக் கூறியிருப்பதன் நயமும் குறிப்பிடத்தக்கதாகும்.

(3) உறைகின்ற ஏனைய திருக்கோயில்களைவிட நெஞ்சக் கோயிலே சிறந்தது என்பது அனைவரும் அறிந்ததே. மற்றும் சகஸ்ரநாமமும் "ஹ்ருதயஸ்தா" - இதயத்தில் இருப்பவள் எனக் கூறுகிறது.

எ. மறைகின்ற வாரிதியோ?

(1) மறையும் கடலோ?

(2) அன்னை கடலில் நாரணன் சக்தியாக 'வைஷ்ணவி' என்றநாமத்துடன் எழுந்தருளுவதாகவும் கூறுவர்.

(3) துருவாசர் கொடுத்த தெய்வீக மாலையினை இந்திரன் மதியாது ஐராவதத்தின் மீது சூட்டுகிறான். அது அம்மாலையினைக் காலில்போட்டு மிதித்ததைக் கண்டு, சினந்த துருவாசமுனிவர் "இந்திரனது அனைத்துச் செல்வங்களும் மறைவதாகுக" எனச் சபித்தார். அதன்படி அவனது எல்லாச் செல்வங்களும் கடலின்

அடியில் சென்று மறைந்தன. அவ்வாறு அவன் செல்வங்கள் மறைந்ததால் "மறைகின்ற வாரிதி" எனப்புராணக் கதையுடன் பொருள்கொள்வது சாதாரணமான விளக்கமாகும். அகத்தியன் உள்ளங்கையால் எடுத்துக் குடிக்க வாரிதி மறைந்துவிட்டது என்ற விளக்கமும் அவ்வாறே சாதாரணமானதாகும்.

(4) ஆனால் சாக்த நூல்களின்படி இந்திரன் பொருள்கள் மறைந்த வாரிதி அன்னை எழுந்தருளும் வாரிதியில்லை. "சுதா சிந்து" அல்லது அமுதக்கடல் என்னும் வாரிதி அண்டங்களுக்கு அப்பால் உள்ளதென்று அவைகூறும். அண்டங்களுக்கு அப்பால் பார்வைக்கு எட்டாத மறைவான இடத்தில் இருப்பதால் அது 'மறைகின்ற வாரிதி' எனப்பட்டது. குண்டலினி யோக சாஸ்திரப்படி அமுதக்கடல் என்பது மூலாதாரத்தில் அச்சக்தி உறங்கிக் கொண்டிருக்கும் சுக்லதாதுவின் தேக்கமாகும். அது சாதாரண மக்களின் காட்சிக்கு மறைந்து நிற்பதால் 'மறைகின்ற வாரிதி' என்றார்.

(5) குண்டலினி தங்கும் வாரிதியினைக் கூறி அன்னையின் சூட்சும தமம் என்னும் வடிவினையும் நினைவூட்டினார். எங்கும் நிறைந்த இறைவியின் சில சிறப்பான இடங்களை இப்பாடலால் குறிப்பிட்டார். இதே கருத்தினைக் கூறும் குலசேகர பாண்டியன் எழுதிய 'மதுராபுரி அம்பிகைமாலை' பாடல் வருமாறு :-

"நும் கேள்வர் பாகத்தும் அந்நாள் மறையெனும் நூலிடத்தும்
கொங் கேய் பொகுட்டுக் கமலாலயத்தும் குடிகொண்ட நீ
எங்கே இருக்கினும் நாயடியேனுக்கு இடர்வரும்போது
அங்கே வெளிப்படுவாய் மதுராபுரி அம்பிகையே"

ஆண்களுக்கு ஆயுள் விருத்தியும் பெண்களுக்கு மங்கலம் நிலைத்தலும் இப்பாடலின் பாராயணபலன் ஆகும்.

வாசகர் கடிதம்

P. கணபதி,
3–புதுத்தெரு, ஆனந்தபுரம், வரகனேரி, திருச்சி.

தருமையாதீன ஞானசம்பந்தம் இதழ் எல்லோரும் வாங்கக் கூடியது. ஒருமுறை வாங்கிப்படித்துப் பார்த்தவர்கள் மறுபடியும் வாங்கிப்படிக்கத் தவறமாட்டார்கள். இராசி பலன் மிகவும் நன்றாகப் போடுகிறீர்கள். அந்தந்த மாதச் சிறப்பு நாட்களை வெளியிடுவது மிகவும் முக்ய அம்சம்தான். இதழ் எல்லோரும் விரும்பக்கூடியதாயுள்ளது.

சிவ கன்னியர்

திரு. அ. பாலகுருவாயன் எம். ஏ.,
இலயோலா கல்லூரி, சென்னை – 34.

நம் சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணத்தில் மனைவாழ்க்கையில் கணவருடன் சிவத்தொண்டு புரிந்து சிறந்த இல்லறத் தலைவியர் உண்டு. சிவமங்கையரில் சிறந்தவர்களான காரைக்கால் அம்மையாரையும், மங்கையர்க்கரசியாரையும் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் குறித்துப் பாடுவதால், இவ் இருவர்க்கும் தனித்தனியே புராணம் அவர் அமைக்கிறார். ஆயினும் திருமணம் பெறாமல் கன்னிமை நிலையிலேயே சிவ நெறியில் ஈடுபட்டு உய்ந்த சிவகன்னியர்களையும் சேக்கிழார் தம் காப்பியத்தில் காட்டுகிறார்.

அப்படிவரும் சிவ கன்னியர் மூவர். தேவார மூவர் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் அவர்கள் தனித்தனியாக இடம் பெறுகின்றனர். பெரியபுராண முறைப்படி, தடுத்தாட் கொண்ட புராணத்துள் வரும் சடங்கவி சிவாசாரியார் திரு மகளார் அவர்களுள் ஒருவர்; திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியார் இன்னொருவர்; திருஞானசம்பந்தர் புராணத்தில் வரும் திருமயிலைப் பூம்பாவையார் மற்றுமொருவர். புராணத்தில் இவர்கள் தொடர்பான வரலாற்றைச் சேக்கிழார் சுருங்கிய அளவில் கூறினாலும் அம் மூவரும் நம் நெஞ்சில் நிலைப்பவர்கள்.

சடங்கவி மகளார் :

புத்தூர்ச் சடங்கவியாரின் திருமகளார் நாவலூரருக்கு மணம்பேசி முடிக்கப்படுகிறார். எனினும் இது நடைபெறும் மணம் அன்று; தடைபெறும் மணம்என்றகுறிப்பைச் சேக்கிழார் காட்டி விடுகிறார்.

> "தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலம் காணக்
> காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயம் செய்தான்"

எனத் தற்குறிப்பேற்றமாகப் பாடும் போது, 'திருமணம் காண' என்னாது 'திருமணக் கோலங் காண' என்பதும், அதைத் தொடர்ந்து,

"வேலைவந் தணையும் முன்னர் விதிமணக் கோலம்
[கொள்வான் .... புக்கான் "

என்பதும் இம் மணம் முற்றுப் பெறுது எனக் காட்டும் குறிப்பு மொழிச் சொற்களே! மணம் நடைபெறும் ஊராக அமைந்த புத்தூரை, 'மணம் வந்த புத்தூர்' என்கிருர். இவ் அடைமொழி யிலும் 'வந்த' என்ற எச்சவினைச் சொல் இதே குறிப்புடன் அமைந்துள்ளது.

சடங்கவி மகளார் பெயர் அறியக்கூடவில்லை. 'செந்திரு அனைய கன்னி,' 'சடங்கவி பேதை,' 'மணவினைக்கமைந்த மாது,' 'சிவ வேதியன் மகள்' என அவரைப் பொதுச் சொற் களாலேயே சேக்கிழார் குறிக்கின்ருர். தக்க சான்றுகளின்றிப் பாத்திரங்களின் பெயர்களைப் புனைந்து கூறும் வழக்கம் சேக் கிழாரிடம் இல்லை என்பதற்கு இது சான்ருகும். அவ்வழக்கத்தை அவர் கொண்டிருப்பின், சிறுத்தொண்டர் புராணத்தில் 'சந்தனத்தார்' என்று தாதியர்க்குக் கூடப் பெயர் கூறிச் செல் கின்ற அவருக்கு, சடங்கவி மகளார்க்கு ஒரு பெயர் கூற முடியாமற் போயிராது.

மணநாளில் நம்பியாரூரர் நன்மணக் கோலம் கொள்வது பாடல்களில் விரிவாகப் பேசப்படுகிறது. அவர் காப்பியத் தலைவர் என்ற முறையில் அஃது பொருந்துகிறது. மணமகனது எழிலைப்போல மணமகளின் எழிலையும் புனைந்து கூறுதல் காப்பிய மரபாயிருக்க, சேக்கிழார் சடங்கவி மகளாரின் திருமணக் கோலம்பற்றி ஒரு வரியேனும் கூருமலே போகின்ருர். விழாக் காணும் பெண்கள் கூற்ருக,

"பெண்களில் உயர, நோற்ருள் சடங்கவி பேதை"

என்று வரும் ஓரிடமும் 'பெண்களில் உயர, நோற்ருள்' எனப் பொருள்படுமாறு, அவர்பின்னுல்தனிமைத்தவம்மேற்கொள்ளப் போவதைச் சுட்டுவதுபோல் அமைகின்றது.

மணங்கொள்ள வந்த நாவலூரரைத் தடுத்தாட்கொள்ளும் இறைவன் செயல், மகிழ்ச்சியளிப்பதாய் உள்ளது. ஆனுல், அவரை மணங்கொண்டு மனையறம் நடத்த எண்ணிய சடங்கவி பேதையின் நிலை அன்று எந்நிலையதோ? அப்பெண்ணிற் பெருந்தகையார் ஆருரரை மணவாளராகப் பெருததை, தான் இழந்த பேருகக் கருதினுலும், இனியும் தனக்கு நாவலூரரே தனிநாதன் என்ற உணர்வில் தவமேற் கொள்வது, என்றும்

பாராட்டுதற்குரியது. அந்த உயரிய பண்பினுல் சிவப்பேறும் அவர்க்கு எளிதில் கிடைக்கிறது.

"....................அன்றே மணம் அழியும்
செயலால் நிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர்நா வலர்தனி நாதனை ஒழியா துணர்வழியில்
பெயரா துயர் சிவலோகமும் எளிதாம் வகைபெற்ருள்"

எனக் கூறிச் சேக்கிழார் இவர் வரலாற்றை முடிக்கின்ருர்.

திலகவதியார் :

திலகவதியார், திருத்தொண்டத் தொகையுள் தனியடியார் வரிசையில் இடம் பெற்றிருக்க வேண்டியவர் என்றுகூட நாம் கருதலாம். மங்கையர்க்கரசியாரைப் போலவே இவர் மாண்பும் மதித்தற்குரியது. பாண்டிமாதேவியார்க்கு இடைவிடாத சிவ நெறிச் சிந்தனையிருப்பினும் சில நாட்கள் அவரைச் சுற்றிச் சமணச்சூழல் இருந்த ஒரு தவக்குறை நேர்ந்து விட்டது. ஆயின் திலகவதியாரிடம் தம் தம்பியாரைக் காண்பதற்குக் கூட,

"நன்றறியா அமண் பாழி நண்ணுகிலேன்"

எனச்சொல்லி மறுத்துவிட்ட சைவநெறிச் சால்பினைக் காண்கின்ருேம். அதுமட்டுமன்று; 'உளராக வேண்டும்' என்று வைத்த கருணையினுல் தம் உயிரைத் தாம் தாங்கியிருப்பதற்குக் காரணமான தம்பியார், சூலைநோய்த் துடிப்போடு வந்து தம் தாளிணைமேல் வீழ்ந்து அயர்கிருர். எனினும், சமணம் தீண்டப் பெற்றவரைத் தாம் தீண்டி எழுப்பலாகாது என்ற சைவத் தீவிரம் திலகவதியார்க்கு வந்து விடுகிறது. அதனுல்தான் 'எழுந்திரீர்' என்கிருர்; அவர் கைகளோ இறைவனைத் தொழுகின்றன. இந்த இடத்தில் சேக்கிழார்,

"தம்பியார் தமை நோக்கி"

"தம்பெருமான் அருள்நினைந்து கைதொழுது"

"எழுந்திரீர் என மொழிந்தார்"

"மருணீக்கியார் தாமும் எழுந்து தொழ"

எனப் பாடுமிடங்கள் இதைத் தெளிவிக்கின்றன. மருணீக்கியார்க்குத் திருநீற்றைத் தொட்டு அணிவிக்கவும் திலகவதியார் தயக்கம் காட்டினுர் என்பதையே,

"திருநீற்றை அஞ்செழுத்தோதிக் கொடுத்தார்"

"பெருந்தகையார் பணிந்து ஏற்று"

என்ற வரிகள் காட்டிச் செல்கின்றன.

பின்னல் 'புலவர் புராணம்' பாடிய ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் இந்த இடத்தைப் பாடும் போது,

"பணிந்ததம்பி யினைக்கையால் வாரித் தூக்கிப்
பாசமிகை யால்தழுவிப் பழுதில் வெண்ணிறணிந்து"

எனக் கற்பனை செய்து பாடியிருக்கிருர்.

பெற்ருேர் பிரிவு, பின் தமக்கு மணம்பேசி முடிவு செய்திருந்த கலிப்பகையார் மறைவு, அதன்பின் தம்பியாரின் சமணச் சார்பு – இப்படித் திலகவதியார்க்கு வந்தவை துன்பங்களின் அடுக்குத் தொடர். கலிப்பகையாரின் மறைவு கேட்டு உயிர்விடத் துணிந்த இவர் எண்ணம் உயர்ந்தது மட்டுமன்று; புதுமையானது; வியப்புத் தருவது!

அன்னை மாதினியார், கணவருடன் சென்ற நினைவு இவருக்கும் வந்திருக்கலாமேனும், மணவினையால் கணவராகப் பெருத ஒருவரை எண்ணி,

"எந்தையும்எம் அனையும்அவர்க் கெனைக்கொடுக்க
[இசைந்தார்கள்
அந்தமுறை யால்அவர்க்கே உரியதுநான் ஆதலினல்
இந்தவுயிர் அவருயிரோ டிசைவிப்பன்"

எனத் தமக்குள் ஒரு முடிவு செய்து கொள்ளுதல் இவர்தம் தனித் தன்மையைக் காட்டுகிறது. 'அவர்க்கு எனைக்கொடுக்க' 'அவர்க்கே உரியதுநான்' 'அவருயிரோடு' எனக் கலிப்பகையாரைத் தமக்கு உரிமையாக்கிக் கூறும் இடங்கள், திலகவதியாரின் கற்புநெறியைக் கல்வெட்டாக்குவன!

பூம்பாவையார்:

"பூம்பாவை விடத்தினல் இறந்தது
மயிலை சிவநேசர்க்குப் பேரிழப்பு.
வள்ளுவர் கூறும் 'செவ்வியான் கேடு'
என்பது இதுதான்"

(திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரம்)

என்கிறார் திரு. கா. சு. பிள்ளையவர்கள். தடுத்தாட்கொண்ட புராணத்தில் புத்தூர்த் திருமணம் தடைபெறப் போவதைக் குறிப்பால் காட்டினாலும், சேக்கிழார் மண நிகழ்ச்சிகளை அங்கே விரிவாகப் பேசுகிறார். ஆனால் திருஞான சம்பந்தர்க்கே பூம்பாவை உரியவள் எனச் சிவநேசர் எண்ணியிருந்தும்,

"புகலி காவலர்க்கிது புணராது"

என முதலிலேயே இங்கு அவர் வெளிப்படுத்தி விடுகிறார். அரவம் தீண்டப் பெறாமல் இருந்திருந்தால் ஒருவேளை சிவநேசர் எண்ணம் நிறைவேறியிருக்குமோ !

அங்கம் பூம்பாவையாய்க் குடம் உடைந்து, தாமரைப் போதவிழ்ந்து எழுவதுபோல் எழுகின்ற காட்சி கற்றைவார் சடையாரின் கருணைக் காட்சி. பூம்பாவை 'இருந்த வண்ணம் எம்பிரான் கருணை' என்பதால் சேக்கிழார் அவ் வடிவழகைப் பாதாதி கேசமாகவும் பாடியிருக்கலாம். மானுடமாய் வந்த கருணையாதலாலும், குடம் உடைந்து எழும்போது தலை முதலாகவே பிற அங்கங்கள் நிரல்படக் காண்போர்க்குப் புலப்படுவதுதான் இயற்கையாதலாலும் சேக்கிழார் பூம்பாவை அழகைக் கேசாதிபாத வருணனை யாக்கினர் போலும் !

"யான் உற்பவிப் பித்தலால் உரை தகாது"

எனத் திருஞானசம்பந்தர் பூம்பாவையை மணம் மறுக்கும் இடம் மகிழ்தற்குரிய மரபு தோன்றுமிடம்! 'பதுமை' என்ற பெண்ணை விடந் தீர்த்து மணந்து கொள்ளும் சீவகன் செயல் கூறும் சிந்தாமணி நூலைச் சேக்கிழார் இதுபோல்தான் மறுத்துக் காட்டுகிறார்.

மயிலைப் பூம்பாவையாரின் மன விருப்பும், மண விருப்பும் தந்தை சிவநேசர் சொல்லும் வழியிலேயே சென்றிருக்கின்றன. திருஞானசம்பந்தரின் அருள்வரலாறு அவ் அம்மையார்க்கும் அவர்மேல் ஈடுபாட்டை விளைவித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. தந்தையின் விருப்பமும் அதுவாய் இருத்தலின், பூம்பாவையார் புகலிப் பிரானையே மணக்கும் ஆர்வத்தைத் தடையின்றி வளர்த்துக்கொண்டிருந்திருப்பார். இந்த நிலையில் ஞானசம்பந்தர் சொல்லும் மறுப்பு இவர்க்கு (சிவநேசர்க்கு) மனக் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். அதனால்,

"மணம் ஏனையோர்க்கு இசைகிலேன்"

என்ற இவரது கூற்றில் பூம்பாவையின் குரலும் பொருந்தியிருப்பதாகக் கொள்வதில் தடையில்லை. எனவேதான் இத் 'தேனமர் கோதையும் சிவத்தை மேவினுள்'.

பூம்பாவையார் சம்பந்தரை மணப்பதற்கென்றே காத்து இருந்தவர். திலகவதியார் கலிப்பகையார்க்கு மணம் பேசப் பட்டவர். சடங்கவி மகளாரோ சுந்தரரை மணக்க மண மேடைக்கே வந்து நின்றவர். இவ்வாறு வெவ்வேறு நிலையில் மணம் பெற முடியாமல் இம் மூன்று சிவ கன்னியர்கள் தவமேற் கொள்வது போன்றதோர் அருமைப்பாடு வேறெங்கும் காணப்படாதது.

தலை, இடை, கடை என்று கற்புநெறியிலும் மூன்று சொல் வதுண்டு. சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியின் கற்பு இவற்றுள் சேராத மறக்கற்பு என்பர். அப்படியாயின், நம் பெரியபுராணத்தில் இடம் பெறும் இச் சிவ கன்னியர் கற்புநெறி இவற்றிற்கும் மேலான 'சிவக் கற்பு, சொல்லுக்கடங்காத சுடர்க் கற்பு' எனச் சொல்லலாம் அல்லவா!

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

இன்று நானும் என் குடும்பத்தாரும், நண்பர்களும் இந்த புராதனமானதும், அற்புதமானதும் ஆன ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் ஸ்தலத்தின் பெருமானையும், ஸ்ரீ அறம்வளர்த்தநாயகியையும் தரிசனம் செய்து மிகுந்த ஆத்ம திருப்தியுடன் பெரும்பேறு பெற்றவர்களாகிறேம்என்ற பெருமிதத்துடனும் திருப்தியுடனும் செல்கிறேம்.

இந்தக்கோயில் கண்காணிப்பாளரும் இதர ஊழியர்களும் நல்லமுறையில் இந்தக் கோவிலை பரிபாலனம் செய்து வருவது மிகவும் மெச்சத்தக்கது.

(S-d) **S. Kannan.**

24—10—81 District Judge (West) Thanjavur.

சப்த மாதர்கள்

திரிசிரபுரம், மகாவித்துவான்

திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

பிராமி, மாகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்னும் எழுவரும், சப்தமாதர்கள் எனப் படுவர். 'சப்த மாதர்கள்' என்னும் இந்த ஏழு தெய்வமகளிரும், மாயூரம் என்னும் திருமயிலாடுதுறைக்கு அருகில், அதனைச் சூழ்ந்துள்ளஏழுதலங்களில், சிவபெருமானை அன்புடன்போற்றிப் பூசித்துவழிபட்டு அருள்பெற்றனர். 1. பிராமி பூசித்த தலம்திருத் தான்றோன்றீசம் என்னும் சுயம்புநாதர் கோயில். 2. மாகேசுவரி வழிபட்டது கருங்குயில்நாதன்பேட்டை. 3. கௌமாரி போற்றியது கஞ்சாறு என்னும் ஆனந்ததாண்டவபுரம். 4. வைஷ்ணவி வணங்கியது பசுபதீசுவரம். 5. வராகி இறைஞ்சியது சக்திபுரி என்னும் கழுக்காணிமுட்டம். 6. இந்திராணி வழிபட்டது தருமபுரம். 7. சாமுண்டி பூசித்தது உத்தரமாயூரம் என்னும் வள்ளலார்கோயில். இச்செய்தியை மகாவித்துவான் பெருங் கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய, திருமயிலாடு துறைத் தலபுராணப்பாடல்கள் உணர்த்துதலைக் காணலாம்.

பேச லாம்புகழ்ப் பிராமிஎன் றுரைப்பவள், தான்தோன்
றீச நாதனை, இமையவர் வாழநஞ் சுண்டு
நாசம் இல்லியை, நலத்தகு பூசனை ஆற்றித்
தேசு அமைந்தபல் வரத்தொடு, சிறப்பெலாம் பெற்றாள்! (1)

சிரத்து மாமதி சூடிய தேவனைக், கருணை
புரத்து நாதனைப் புண்ணிய மூர்த்தியைப், புகழ்சால்
உரத்து மேம்படும் மயேச்சரி பூசனை உஞற்றி,
வரத்து மேதகு சிறப்பெலாம் பெற்றனள் வாழ்ந்தாள்! (2)

ஆறு சூடியை, அற்புதக் கூத்தனை, அவிர்கஞ்
சாறு மேவிய சங்கரன் துணைக், கவு மாரி
ஊறும் அன்பினில் ஒளிகெழு பூசனை உஞற்றி,
ஏறு பற்பல வரங்களும் இன்புறப் பெற்றாள்! (3)

பரவு புண்ணிய நாதனைப், பசுபதீச் சரத்து
விரவும் ஆதியை, அடியருக் கெளியவே தியனைப்,
புரவு பூண்டொளிர் வயிணவி பூசனை புரிந்து,
கரவு தீர்தரு வரமெலாம் பெற்றுளம் களித்தாள் ; (4)

கரியின் தோல்திரு மேனியிற் கவினுறப் போர்த்தி,
அரியின் கண் அடி அணிதரும் அண்ணலைச், சக்தி
புரியின் மேவிய பொருளினை, வராகி பூசித்தாள் ;
தெரியின் மேம்படு வரமெலாம் சிறப்புறப் பெற்ருள் ! (5)

கரம்வி ராயவச் சிரக்கவின் பெற்ற இந்திராணி,
உரம்வி ராயபல் லுயிர்க்கும்நன் கருள் திருத் தரும
புரம்வி ராய அற் புதன் அடிப் பூசனை புரிந்தாள் ;
பரம்வி ராயபல் வரங்களும் பண்புறப் பெற்ருள் ! (6)

பார மேருவிற் பரமனைப், பரவும்உத் தரமா
பூர நாதனை, உம்பர்கள் தம்பெரு மானைத்,
தீர மேதகு சாமுண்டி பூசனை செய்து
வார மேயபல் வரங்களும் பெற்றுளம் மகிழ்ந்தாள் ! (7)

– நன்றி. திருக்கோயில். (ஜூன் 1981)

கடிதம்

இன்று 'ஞானசம்பந்தம்' வரப்பெற்றேன். பாராட்டுகிறேன். இன்றையநிலையில், நமது இந்து சமயம் வளர்ச்சிபெற இத்தகைய இதழ்கள் தேவை. ஆதீனங்கள் தங்கள் கடமையை நிறைவேற்ற, தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டு மக்களுக்கு அறிவுறுத்த, அறநிலையங்களை, திருக்கோயில்களைப் பாதுகாத்து நிலைநிறுத்த நமது சமயத்திற்கு அரசுசெய்யும் தவருன சட்டங்களை அமுல் நடத்தாமல் தடைசெய்ய இத்தகைய இதழ்கள் முக்கியதேவை. இவ் இதழ் சிறந்து வளர அருள்மிகு கற்பக விநாயகப்பெருமான் முன்நிற்பார் என்பது திண்ணம்.

நா. அருணசலன்
செயலாளர்,
அருள்நெறித் திருக்கூட்டம், கண்டவராயன்பட்டி.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு 22—10—1981 வியாழக்கிழமையன்று திருநாலூர் அருள்மிகு பலாசவனநாதர் திருக்கோயிலிலும் திருநாலூர் மயானம் அருள்மிகு ஞானபரமேசுவரர் திருக்கோயிலிலும், ஆண்டான்கோயில் என வழங்கும் திருக்கடுக்காய்க்கரைப் புத்தூர் அருள்மிகு சொர்ணபுரீசுவரர் திருக்கோயிலிலும் சிறப்பான முறையில் நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனை களுடன் கூடிய வழிபாட்டின்போது அவ்வத்தலப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. திருக்கடுக்காய்க்கரைப்புத்தூர் திருக்கோயிலில் ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமி களும், புலவர் திரு. சொ. முத்தையன், எம். ஏ. அவர்களும், புலவர் திரு. கோ. சுப்பிரமணியன் அவர்களும் சமய விரிவுரை நிகழ்த்தினர்கள். அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிக நூல்கள் வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப்பட்டது. அன்பர்பலர் ஆலய வழிபாட்டிற் கலந்துகொண்டு பயனுற்றனர்.

தருமையாதீனத்திலும் திருப்பெண்ணாகடத்திலும் ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூஜை விழா

சந்தானகுரவருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் குருபூஜைத் திருநாள் வழிபாடு சுவாதி நட்சத்திரம் கூடிய ஐப்பசித்திங்கள் 12 ஆம் நாள் (28—10—81) புதன்கிழமை யன்று காலை தருமையாதீனம் ஸ்ரீஞானபுரீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. மாலை 7 மணியளவில் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், பி.லிட்., சிவஞானபோதச் சொற்பொழிவு நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் எழுந் தருளி, வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கி னர்கள்.

அன்றுகாலை திருத்துறங்கானைமாடம் அருள்மிகு கடந்தை நாயகி உடனுகிய அருள்மிகு சுடர்க்கொழுந்தீசர் திருக்கோயிலில் சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அராதனைகளும் பெண்ணுகடம் ஸ்ரீமெய்கண்டதேவர் ஆலயத்திலுள்ள குருமூர்த்தத்திற்கும், திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ மெய்கண்டதேவர் ஆலயத்திலுள்ள குருமூர்த்தத்திற்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. பெண்ணுகடம் குருமூர்த்த ஆலயத்தில் சாத்திர விரிவுரை நடைபெற்றது. அன்பர்பலர் வழிபட்டும், விரிவுரை கேட்டும் பயன்பெற்றனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி
பத்தாம ஆண்டுக் குருபூசை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் பத்தாம் ஆண்டுக் குருபூஜை விழா (20—10—81) செவ்வாய்க்கிழமையன்று குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைப்பெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிக் குருமூர்த்தஆலயத்தில் விசேஷ அபிஷேகஆராதனைகள் நிகழ்த்தி, அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினர்கள்.

காலை வழிபாட்டின்பின்னர், பத்தாம் ஆண்டுக் குருபூசை நினைவாகப் பத்தாம் திருமுறைபற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்வுற்றன. பத்தாம் திருமுறை, ஒன்பது தந்திரங்கள் பற்றி தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களும் மகா வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் சொற்பொழிவு ஆற்றினர். நண்பகல் மகேசுவரபூஜை நிகழ்வுற்றது மாலை தருமையாதீனத் திருக்கோயில்களின் திருமுறைப் பணியாளர்கள் திருமுறை இசையரங்கு நிகழ்த்தினர்.

இரவு வழிபாட்டின்போது "திருவுந்தியாரும், கொடிக் கவியும்" (உரைநடையுடன்) விழாமலராக வெளியிடப்பட்டது. 'கயிலைக் குருமணி' என்ற தலைப்பில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள் வில்லிசை நிகழ்ச்சி நடத்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வந்திருந்த பெருமக்களுக்கு குருஅருட் பிரசாதம் வழங்கியருளினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அறக்கட்டளையின் சார்பில் ஸ்ரீகாசியில் :- ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி முத்திப்பேறெய்திய

ஸ்ரீ காசி குமாரசுவாமி மடத்தில் குருமணியின் திருவுருவப் படத்திற்குச் சிறப்பு வழிபாடும், ஸ்ரீ விசாலாட்சியம்மை உடனுகிய ஸ்ரீ விசுவநாதர், ஸ்ரீ அன்னபூரணி, ஸ்ரீ கேதாரநாதர் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நண்பகல் மகேசுவரபூஜையும், சாதுக்களுக்குப் பண்டாராவும் சிறப்புற நடைபெற்றன.

மாயூரத்தில் :— ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜைவிழா யன்று மாலை 7 மணியளவில் மாயூரம் தெய்வத்தமிழ் மன்றத் தினரால் ஏ. வி. சி. திருமண மண்டபத்தில் நினைவுவிழா கொண் டாடப்பெற்றது. பேராசிரியர் திரு. அ. நடேச முதலியார் அவர்கள் சிறப்புரை ஆற்றினர். அன்பர் பலர் வந்திருந்து கேட்டுப் பயனுற்றனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஞானபீடத்தமர்ந்தநாள்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞான பீடத்தமர்ந்த திருநாள் 24—10—81 சனிக்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கு உருத்திராபிஷேகமும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனை களுடன் நிகழ்வுற்றது. பன்னிரு திருமுறைகளும் பூசிக்கப் பெற்றுப் பராயணம் செய்யப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்திற்குத் திக்பால விஜய ஸ்நாந சாந்தி ஹோமம் நிகழ்வுற்றது. ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அம்பாள் சந்நிதியில் ஸ்ரீசூக்த அகண்டபாராயணமும் நிகழ்ந்தன. விழாவில் கலந்து கொண்ட அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருட்பிரசாதம் வழங்கியருளினர்கள். மெய்யன்பர்கள் பலரும் விழாவில் கலந்து கொண்டு குருதரிசனம் செய்து பயன் பெற்றனர்.

கந்த சஷ்டி விழா

தருமையாதீனத்தில் :

அருள்மிகு முருகப்பெருமானுக்கு உரிய திருநாட்களுள் மிகச்சிறந்ததாகக் கொண்டாடப்பெறும் கந்த சஷ்டிவிழா 28—10—81 புதன்கிழமை முதல் 2—11—81 திங்கட்கிழமைவரை மிகச்சிறப்பான முறையில் நிகழ்வுற்றது. ஆதீனத்தில்,

ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீசொக்கலிங்கப்பெருமான்வழிபாட்டுடன் ஸ்ரீ முருகப்பெருமானுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளினர்கள். தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி, தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ. அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூசை மடத்தில் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினர்கள். ஆதீன அடியவர்களும் அலுவலர்களும் அன்பர்களும் கேட்டுப் பயனுற்றனர்.

ஆதீன தேவஸ்தானங்களில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி. திருப்பனந்தாள், திருவையாறு, திருபுவனம், திருக்கடவூர், வைத்தீசுவரன் கோயில், மாயூரம்குமரக் கட்டளை, பேரளம் முதலிய திருக்கோயில்களில் ஸ்ரீ முருகப் பெருமானுக்கு சிறப்பு வழிபாடுகளுடன் 28—10—81 முதல் 2—11—81 வரை தக்க அறிஞர்களைக் கொண்டு கந்தபுராணச் சொற்பொழிவுகளும் நிகழ்த்துவிக்கப் பெற்றன.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமி திருக்கோயில் சந்நிதியில் .வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ. அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயிலில் திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர், திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., அவர்களும், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயிலில் வித்துவான். திரு. சுவர்ணகாளீசுவரன் அவர்களும்,திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ, அவர்களும் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரர் திருக்கோயிலில் வித்துவான். திருமதி. ப. நீலா, எம். ஏ. அவர்களும், வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ, அவர்களும் மாயூரம் குமரக்கட்டளை, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், டாக்டர்., திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., பி. எச். டி, அவர்களும், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. சு. மு. சுந்தரராஜன், எம். ஏ. அவர்களும், கந்தபுராண விரிவுரை யாற்றினர். அவ்வத்தலத்து அன்பர்கள் பெருமானைத்தரிசித்தும், பெருமான்புகழ் கேட்டும் இன்புற்றனர்.

வேளூர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கும் மாயூரம் – குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும் சஷ்டி விழா ஆறு நாட்களிலும் விசேஷ அபிஷே அலங்கார ஆராதனைகளும் திருவீதியுலாக் காட்சியும் நடைபெற்றன. குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு லட்சார்ச்சனை நடைபெற்றது. அன்பர் பலர் தரிசித்து இன்புற்றனர்.

நிறைபணி விழா

நிறை பணி விழா விழா புரட்டாசித்திங்கள் பௌர்ணமி நாளன்று இறைவனுக்குச் சிறந்த முறையில் நிகழ்த்தப் பெறுவது. சந்நிதியில் மலர்ப்பந்தல் அமைத்து, இளநீர், காய், கனி முதலியவற்றைத் தொங்கவிட்டு அழகுபெறச் செய்தும் இறைவனுக்குச் சிறப்பு அபிஷேக அலங்காரங்களை நிறைவுறச் செய்தும் கொண்டாடப் பெறுவது. திருமால் இறைவனைப் பூசித்துஅருள்பெற்ற இந்நாளில் திருமால்ஆணைப்படி,தேவர்கள் பூசித்தனர் என்று சிவரகசியம் கூறுகின்றது. தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்திலும், ஆதீன தேவஸ் தானங்களாகிய வைத்தீஸ்வரன் கோயில், திருக்கடவூர், திருபுவனம், சீகாழி முதலிய திருக்கோயில்களிலும் இவ்விழா 13—10—81 செவ்வாய்க் கிழமை அன்று மிகச் சிறப்பான முறையில் நிறைபணி விழா நடைபெற்றது. அன்பர் பலர் வழிபட்டுப் பயன்உற்றனர்.

ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணிமன்றம்

மதுரை *(கிளை)*

மதுரை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றக் கிளையின் பத்தாவது திருமுறைக் கூட்டுவழிபாடு திரு. இராம. முத்துப் பழநியப்பச்செட்டியார் தலைமையில் மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரே சுரர் கோயிலின் சங்கத்தார் கோயில் முன்னர் நிகழ்வுற்றது. அறங்காவர் குழுவின் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் தொடங்கி வைத்தார். அமெரிக்கப் பயணம் செய்து வந்த, குழுத்தலைவரைப்பணிமன்றச்சார்பில்திரு.க.வெள்ளைவாரணனார் வாழ்த்துக்கூறிப் பாராட்டிப் பேசினார். வித்துவான். திரு. தா. குருசாமி ஓதுவார் பாராட்டுக்கவிதை வாசித்தளித்தார். திருவாசகத்தில் சிவபுராணம், கீர்த்தித்திருஅகவல் பாராயணம் நிகழ்வுற்றது. திருப்பதிகங்கள் இசையுடன் ஓதப்பெற்றன;

'மங்கையர்க்கரசி' பற்றிய பதிகங்கட்கு வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனூர் விளக்கம் அளித்து உரை நிகழ்த்தினர். 'வேதவேள்வி' பதிகம் பற்றிய விளக்கங்களைத் திரு. க. வச்சிரவேல் முதலியார் எடுத்துரைத்துச் சொற்பொழிவு ஆற்றினர். திரு. நீ. சீ. சுந்தரராமன் பணிமன்றச் சார்பில் நன்றி கூறவழிபாட்டுடன் விளக்கக் கூட்டம் நிறைவுற்றது.

திருமுறைக் கூட்டுவழிபாட்டுக் கூட்டத்தின் பதினோராவது வழிபாடு 1—11—81ல் ஆவுடையார் கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. மதுரை திரு. டி. பி. ஆர். கமலதியாகராசன் அவர்கள் கலந்து கொண்டார். மதுரை திருமுறைப் புலவர் திரு. இராம. முத்துப்பழநியப்பச் செட்டியார் அவர்கள் உதவியுடன் ஆவுடையார் கோயில் வழிபாட்டுக்கு அன்பர்கள் சென்றனர். திருக்கோயிலில் ஆதீனக்கோயில் மானேஜர் மரியாதைகளுடன் அன்பர்களை வரவேற்றூர். திருவாசகம் திருப்பள்ளி எழுச்சி பண்ணுடன் பாராயணம் செய்து வழிபாடு நிகழ்வுற்றது. திருப்பெருந்துறையில் அருளிய திருவாசகப்பகுதிகள் பாராயணம் செய்யப்பெற்றது. திரு. பி. டி. ஆர். கமலதியாகராசன் தொடக்கவுரையுடன் விளக்கக் கூட்டம் நிகழ்வுற்றது. பேராசிரியர் திரு, க.வெள்ளைவாரணனூர், திரு.க.வச்சிரவேல்முதலியார் திரு. மு. சணமுகம்பிள்ளை ஆகியோர் திருவாசக உட்கிடையை விளக்கி உரையாற்றினர். ஆதீனத்திருக்கோயிலில் சிறப்பான முறையில் வசதிகளும் மரியாதைகளும் அன்பர்கட்குச் செய்விக்கப்பெற்றன. மாலை 5 மணியளவில் திருப்புனவாயிலில் பதிகபாராயணத்துடன் வழிபாடு நிகழ்ந்தது. திரு, க. வெள்ளைவாரணனூர் பதிக அடைவு செய்தார். அன்பர் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

சிவஞானசித்தியார் – சுபக்கம்

(மூலமும், திரு கா. சு. பிள்ளை உரைநடையும்)

பக்கங்கள் 184. விலை ரூ. 2—60. சைவ சித்தாந்த சாத்திர நூல்களைக் கற்க விரும்புவோருக்கும், இளங்கலை (தமிழ்) (B. Lit) முதுகலை (தமிழ்) (M. A.) வகுப்புக்களில் சைவ சித்தாந்தத்தை விருப்பப் பாடமாகக்கொண்டு கற்போருக்கும் பெரிதும் துணையாகப் பயன்படக் கூடிய இனிய சாத்திர நூல். கிடைக்கும் இடம் :-

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம், மாயூரம் 609 001
தஞ்சை மாவட்டம்.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துன்மதிஹூ கார்த்திகைமீ 1உ முதல் 30உ முடிய)

(16—11—81 முதல் 18—12—81 முடிய)

ஸ்ரீ துன்மதிஹூ கார்த்திகைமீ 1உ சோமவாரம் புனர்பூச நக்ஷத்திரம் தைதுலை கரணம் கூடியகாலத்தில் சூரிய உதயம் முதல் 16 நாழிகை 14 வினுடிக்குக் கும்பலக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் துலாராசியிலிருந்து விருச்சிகராசி சங்கிரமணமாக கார்த்திகை மாதப்பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று விஷ்ணுபதி புண்ணிய காலமாகும். கார்த்திகைமீ 1உ முடவன் முழுக்கு விசேஷம். சங்கிரமண காலத்தில் கிரகமாலிகை ஸ்திதியினுல் லோகத்தில் எங்கும் சுபிட்சம் ஏற்படும். தேசங்களில் தர்ம இராஜ்ஜிய பரிபாலனம் நடைபெறும். ஸ்திரி ஜனங்களுக்கும் பிராமண சாதுஜனங்களுக்கும் நல்லன ஏற்படும். கால்நடைகள் பசுக்கள் விருத்தியாகும். பால் உணவுப் பொருள்கள் பெருகிவரும்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவராஜ யோகத்தில் மிளிர்கின்ற சிவ ஞானகுருமகான்கள் லோகத்திற்கு நல்ல நீதி மார்க்கங்களையும் சிஷ்ய கோடிகளுக்கு சிவஞானத்தையும்தம்திருவாய் மலர்ந்துபோதித்து அனுக்கிரகம் செய்தருளுவார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசை சிறப்பாக நடைபெறும். பிரஜைகள் தெய்வ தரிசனம்செய்து பரமானந்தத்துடன் நல் வாழ்க்கை நடத்தி உயர்வடைவர்.

இராகு கேதுபெயர்ச்சி

குறிப்பு :- துன்மதிஹூ கார்த்திகைமீ 19உ (4—12—81) சுக்கிரவாரம் பூரட்டாதி நக்ஷத்திரத்தில் சூரிய உதயம்முதல்

35 நாழிகை 15 விநாடிக்கு இராகுபகவான் புனர்பூச நக்ஷத்திரம் 4ஆம் பாதத்திலிருந்து 3ஆம் பாதத்தில் மிதுனராசியிலும் கேது பகவான் உத்திராட நக்ஷத்திரம் 2ஆம் பாதத்திலிருந்து முதல் பாதத்தில் தனுர்ராசியிலும் பெயர்ச்சி ஆகி அவ்விராசிகளில் பதினெட்டு மாதங்கள் (1½ வருஷம்) சஞ்சரிப்பார்கள். இதனால் உலகில் மேஷம், சிம்மம், மகரம் இவ்விராசி யுடையோருக்கு மனோபலம், காரியஜெயம், பணவருமானம், பெருமதிப்பாகக் காரியங்களை செய்தல், இயந்திர சாதனத்தினின்றும் பொருள் களின் உற்பத்தி அதிகமாகுதல், பெரிய ஆலைகளில் நிர்வாகம் ஏற்றல் ஆகிய நற்பலன்களை ஏற்படுத்தும்.

கடகம், துலாம், கும்பம் இவ்விராசியுடையோருக்குச் சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொள்ளுதல், தெய்வபக்தி மிகுதல், நல்ல கீர்த்தி, அரசாங்ககௌரவம் பெறுதல், புதிய தொழில்கள் தொடங்குதல் ஆகிய முன்னேற்ற ஸ்திதியை ஏற்படுத்தும்.

ரிஷபம், விருச்சிகம், மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இவ் இராசியுடையோருக்கு அடிக்கடிவெளியூர்பயணம், பொய்யான அபவாதம், மனநிம்மதி இல்லாமை, வியாதி, அதிகசெலவு, குலாசார அனுஷ்டானங்களைச் செய்யமுடியாமை ஆகிய சாதாரண பலனாகும்.

சாந்தி :- எல்லா இராசியை யுடையோரும் ஸ்ரீ துர்க்கா தேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து பிரார்த்திக்க அலைச்சல் சிரமம் நீங்கும். எல்லாவித நன்மைகளும் ஏற்படும். சுபம் தரும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – ¼

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபபலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் மதிப்பாக வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். வித்துவத் துவம் கலைத்துறைகளில் நல்லனஏற்படச்செய்யும். வாகனசுகம் திருப்தியளிக்கும். புத்திரனின் கல்வி தொழில் துறைகளில் முன்னேற்ற ஸ்திதியை ஏற்படுத்தும். வழக்குகளில் பூரண ஜெயம் தரும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தான தர்ம நல்லியல்புடன் நடந்துவரும். நவம்பர் 16, 21, 22, 23, 24, 25 டிஸம்பர் 1, 2, 3, 4, 5, 8, 9, 12, 13 தேதிகளில் நற்பலன் ஏற்படும். நவம்பர் 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்லவிதத்தில் பண வருமானம் வந்து கொண்டிருக்கும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். விடு வாகன பிராப்தியில் மாற்றம் ஏற்படும். மனைவிபுத்திரர் களால் சொற்ப மனசங்கடம் வந்து உடன் நீங்கச்செய்யும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் விசேஷ பலனை உண்டு பண்ணும். நவம்பர் 17, 18, 23, 24, 25, 26, 27 டிஸம்பர் 3, 4, 5, 6, 7, 10, 11, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். நவம்பர் 28, 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்தம பலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾
(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நல்லபண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு சௌக்கிய பலன் தரும். வித்துவத்துவம், கலைத் துறைகளில் நன்மதிப்பும் பிரயோஜனமும் தரும. எழுத்துமூல விஷயங்களில் நல்லன வந்துசேரும். இருப்பிடத்தில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 19. 20, 26, 27, 28, 29, 30 டிஸம்பர் 6, 7, 8, 9, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். டிஸம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டோ.)

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் வந்துகொண்டிருக்கும். சில அவசிய செலவினங்களும் ஏற்படும். டிஸம்பர் 7வ முதல் சகல பிரச்சனைகளிலும் சாதகங்களை ஏற்படுத்தும். வித்துவத்துவம் கலைதுறைகளில் பிரபல ஸ்திதியாகும். தூரதேசத்திலிருந்து நல்ல செய்திவரும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நன்மைகள் பல ஏற்படும். நவம்பர் 17, 18, 21, 22, 23, 29, 30 டிஸம்பர் 1. 2, 8, 9, 10, 11, 14, 15 தேதிகளில் விசேஷமான நற்பலன்களையளிக்கும். டிஸம்பர் 3, 4, 5 தேதிகள் சந்திராஷ் டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வரவு செலவுகள் சரிசமனாகும். நவம்பர் 24வ முதல் இராஜகன்னியமாக எல்லாக்காரியங்களும் நடந்து கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் உத்தியோகத்தில் உயர்ந்த அந்தஸ்தளிக்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். நவம்பர் 16, 19, 20, 24, 25 டிசம்பர் 1, 2, 3, 4, 5, 10, 11, 12, 13 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை யளிக்கும். டிசம்பர் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமானபலனைத் தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் நலனில் அவசிய செலவினங்களை ஏற்படுத்தும். பசு, பால் கறவை திருப்தியளிக்கும். ஓர்புனித தலம் செல்லுதல் ஆகும். வியாதி குணமாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 17, 18, 21, 22, 26, 27, 28 டிசம்பர் 3, 4, 5, 6, 7, 12. 13, 14, 15 தேதிகளில் தனதாயம், மிகுந்த சௌகரியம் தரும். டிசம்பர் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தில் பணவருமானம் கணிசமாக வந்துகொண்டிருக்கும். வெளுமை வஸ்துவின் பிராப்தியை யளிக்கும். நவம்பர் 24 தேதிக்கு மூதாதையர் சொத்துப் பிராப்தி கைக்கு வருவதாகும். ஓர் தூரதேசப் பயணம் ஏற்படும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 17, 18, 19, 20, 24, 25, 29, 30 டிசம்பர் 6, 7, 8, 9, 14, 15 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை அளிக்கும். டிசம்பர் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் வெகுவாக வரும். சுப விசேஷங்களில் செலவும் ஆகும். ஆபரணபிராப்தியை யளிக்கும். வித்துவத்துவத்தில் உயர்ந்த ஸ்திதி ஏற்படும். பூமியில் விருத்திபலன் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 19, 20, 21, 22, 23, 26, 27 டிசம்பர் 1, 2, 8, 9, 10, 11 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களை யளிக்கும். நவம்பர் 16, டிசம்பர் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ பா. பி. - பு. த. ப, ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானம் வந்துகொண்டிருக்கும். டிசம்பர் 7உ முதல் சகோதரருக்கு நன்மைகள் ஏற்படும். பெற்றோருக்கு சாதாரணமாக உள்ள தேக நலிவு குணமாகி சௌக்கியம் தரும். ஜீவனோபாயங்களில் மதிப்பு உயர்தல் அரசாங்க நன்மை ஏற்படுதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 21, 22, 23, 24, 25, 29, 30 டிசம்பர் 3, 4, 10, 11, 12, 13 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களை யளிக்கும். நவம்பர் 17, 18 டிசம்பர் 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் அளிக்கும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் வரவாகிக்கொண்டிருக்கும். சில சந்தர்ப்பங்களில் டாம்பீக கௌரவத்தில் செலவு ஏற்கநேரும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் நன்மதிப்பு ஏற்படும். புத்திரர் அல்லது புத்திரிக்கு சுபம் தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம்நிலவும். நவம்பர் 16, 17, 18, 24, 25, 26, 27 டிஸம்பர் 1, 2, 6, 7, 12, 13, 14, 15 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில்மத்திமபலன்தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் வெகுவாகவரும். நவம்பர் 26உ அளவில் வித்தியா வியாபாராதிகளில் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். விடுவாகனங்களின் பிராப்தியில் மிகுந்த சௌகரியம் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 17, 18, 19, 20, 26, 27, 28, 29, 30 டிஸம்பர் 3, 4, 8, 9, 14, 15 தேதிகளில் தனுதாயாதிநற்பலன்களேயளிக்கும். நவம்பர் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
(தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் கெடியான நிலைமையிலேயே பணவருமானம் வரவாகிக்கொண்டிருக்கும். சகோதரர் ஒற்றுமைக்கு வருவர். விவகாரங்களில் ஜெயம் தரும். ஜீவனுேபாயத் தொழில் உத்தியோகம் இவற்றில் டிசம்பர் 8உ முதல் நல்லபிரயோஜனம் ஏற்படுவதாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 19, 20, 21, 22, 29, 30 டிசம்பர் 1, 2. 5, 6, 7, 10, 11தேதிகளில் காரியஜெயம், தனுதாயம் ஆகியநற்பலன்களே ஏற்படுத்தும். நவம்பர் 23, 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

" ஞானசம்பந்தம் "
தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளே உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	...	ரூ.	10—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	...	ரூ.	12—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு)	...	ரூ.	18—00
ஆயுள் சந்தா (உள்நாடு)	...	ரூ.	100—00
ஆயுள் சந்தா (வெளிநாடு)	...	ரூ.	125—00

செயலாளர் :— ஞானசம்பந்தம் செயலகம், தருமபுரம், மாயூரம் 609 001, தஞ்சை மாவட்டம்.

உ

சிவமயம்

கார்த்திகைமாதச் சிறப்பு நாட்கள்

16—11—81 திங்கள், விருச்சிகரவி 16 — 14 முடவன் முழுக்கு, திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம், விஷ்ணபதி புண்ய காலம். கிருதயுகாதி. திருக்கடவூர் 1008 சங்காபிடேகம். இவ்விதம் ஐந்து சோமவாரங்களும் நடைபெறும்.

18—11—81 புதன், காளாஷ்டமி. காலபைரவாஷ்டமி. திருவையாற்றில் தீர்த்தம். ஸ்ரீ ஆட்கொண்டார் அபிஷேகம். வடமாலைக் காட்சி. ஆயில்ய விழா.

21—11—81 சனி, மெய்ப்பொருள் நாயனர் குருபூஜை.

22—11—81 ஞாயிறு, குத்தாலம், திருப்பறியலூர், கருங்குயில்நாதன் பேட்டை ஆகிய தலங்களில் பானுவார தீர்த்தம். இவ்விதம் நான்கு பானுவாரத்தில் நடைபெறும். ஆனய நாயனர் குருபூஜை.

23—11—81 திங்கள், சோமப்பிரதோஷம்.

24—11—81 செவ்வாய், மாதசிவராத்திரி.

26—11—81 வியாழன், சர்வ அமாவாசை.

28—11—81 சனி, மூர்க்க நாயனர் குருபூஜை.

29—11—81 ஞாயிறு, சிறப்புலி நாயனர் குருபூஜை.

30—11—81 திங்கள், திருவண்ணமலை தீப உற்சவாரம்பம்.

7—12—81 திங்கள், தருமை 8 ஆவது குருமகாசந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள் குருபூஜை.

8—12—81 செவ்வாய், தருமை 16 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

9—12—81 புதன், பிரதோஷம், பரணிதீபம், திருவண்ணமலைதீபம். வைகானஸதீபம், கிருத்திகை அபிஷேகம். கணம்புல்லர் நாயனர் குருபூஜை.

10—12—81 வியாழன், வேளூர்க் கிருத்திகை. சர்வாலய தீபம். பௌர்ணமி விரத பூஜை. மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள்.

11—12—81 வெள்ளி, பௌர்ணமி திதி. பஞ்சராத்ரதீபம். குத்தாலத்தில் அபிஷேகம். கடைவெள்ளி. ஸ்தலவிருக்ஷபூஜை. தருமை 18 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் குருபூஜை.

15—12—81 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை. ஆயில்ய விழா. தனுர் ரவி 46—38.

அம்பிகை நாமாவளி இசைப்பாடல்

திருமுறைக்கலாநிதி

வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்

இராகம் - வசந்தா] [ஆதிதாளம். திஸ்ர நடை.

மீனாக்ஷி மீனாக்ஷி மதுரைநகர் மீனாக்ஷி
மேதினியில் சொக்கநாதர் பக்கம்மேவுமீனாக்ஷி (மீ)

1. வாணட்சிசெய்வோரும் வந்துவணங்கும்மீனாக்ஷி
வையகத்தில் நல்வாழ்வை வழங்குகின்ற மீனாக்ஷி (மீ)

2. கன்னியெனும் நாமங்கொண்ட கருணைமிகும் மீனாக்ஷி
கன்னிநாடெனச் சொல்லற்குரிய அரிய மீனாக்ஷி (மீ)

3. அங்கயற்கண்ணியெனும் அன்னை அவள் மீனாக்ஷி
அபயம் அபயம்தான்பார்க்கு அஞ்சலெனும் மீனாக்ஷி (மீ)

4. காஞ்சியில் காமாக்ஷியாகிக் காட்சிதரும்மீனாக்ஷி
கைகுவித்துத்தொழுவாரைக் கைவிடாத மீனாக்ஷி (மீ)

5. இதயத்தில் எண்ணுவார்க்கு இன்பம்தரும் மீனாக்ஷி
எங்குஎங்குச்சென்றாலும் எதிர்நிற்கும் மீனாக்ஷி (மீ)

6. சித்தம்வைத்தவர்க்குஎன்றும் தித்திக்கும் மீனாக்ஷி
தில்லையிலே சிவகாமி எனத்திகழும் மீனாக்ஷி (மீ)

7. எண்திசையும் புகழ்கொண்ட எங்கள் அன்னை மீனாக்ஷி
எப்பிழையும் பொறுத்தினிய அருள்வழங்கும் மீனாக்ஷி (மீ)

8. எந்நாளும் ஏத்தஇடர் நீக்குகின்ற மீனாக்ஷி
இருநாழிநெல்லால் இச்சகம்காக்கும் மீனாக்ஷி (மீ)

9. சொற்றமிழால் துதிப்பார்க்குத் துணையாவாள் மீனாக்ஷி
தூயஉள்ளம்கொண்டார்க்குத் தாயாவாள் மீனாக்ஷி (மீ)

10. நற்பண்பும் நற்குணமும் நமக்கீவாள் மீனாக்ஷி
நற்சங்கத்திற்கூட்டி நலம்விளைப்பாள் மீனாக்ஷி (மீ)

11. மயல்நீக்கி உயர்வளிக்கும் மாதேவி மீனாக்ஷி
மங்களவாழ்வை அளித்து மகிழவைக்கும் மீனாக்ஷி (மீ)

12. இடைவிடாது ஏத்துவார்தம் இன்னல்தீர்க்கும் மீனாக்ஷி
என்றென்றும் ஏற்றம்தரும் எங்கள் அன்னை மீனாக்ஷி (மீ)

13. ஆவிக்கு அருந்துணையாய்வருகின்ற மீனாக்ஷி
அணுகுவாரை அணுகிஅருள் வழங்குகின்ற மீனாக்ஷி (மீ)

14. கருத்தில்நினைப்பவர் வருத்தம்நீக்கும் எங்கள்மீனாக்ஷி
கசிந்து கிக்கண்ணீர்பெருகக் கடைக்கண்பார்க்கும்
[மீனாக்ஷி. (மீ)

Printed & Published by V. Ramaiah Pillai. Manager, Dharmapuram
at the Gnanasambandam Press Dharmapuram. Mayuram. 10-11-81